Regd. No. M. 4900. 16-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-2-0.

# குடி அரசு

ESTD. 1924

வருட சந்தா உள்நாடு ரூ. 7-0-0. வெளிநாடு ரூ. 9-0-0.

மாலை 21 ஈரோடு 29-11-1947 சனிக்கிழமை மலர் 12.

## கவலையின்றிக் கண் மூடலாம்.

[நந்தன்]

★

### நெடு வெண்பா.

நல்லனவுந் தீயனவும் நாடிப் பகுத்தறியும்
வல்லமை மானிடர்க்கு வாய்த்திருக்குந் தன்மையினால்,
ஆறறிவு கொண்டோன், அனைத்துயிர்க்கும் மேலவன்;
ஊறுகின்ற சிந்தனையான் ஓங்கும் மனிதனெனச்
சொல்லிவரும் கொள்கைக்கு மாறாகிச், சூழ்ச்சியினால்
இல்லையெனும் ஒன்றை இருப்பதாய் நம்பி மிக
ஏமாந்து வாழுகின்ற என்தமிழர் கேட்டினுக்குச்,
சாமான்ய மானஒரு சாட்சிபகர் வேனே:—

மலையைப் பிளந்து வகைக்கொருதுண் டாக்கிச்
சிலைசெய்யுஞ் சிற்பியின் சிற்றுளியிற் பட்டுப்
பலவடிவ மாகின்ற பாறாங்கல் லை,நாம்
நிலையடியிற் போட்டுநிதம் நின்று மிதித்தேறி
வீட்டுக்குட் செல்கின்றோம்; வீட்டின் புறக்கடையில்
தோட்டத்து மூலைத் தொலைவில் ஒதுக்கிடமாம்
கட்டிடத்தில் இட்டுக், கழிவுப் பொருள்தங்க
விட்டிருக்கின் றோமன்றோ? மேலும் அடுக்களையில்
அம்மிஉரல் ஆட்டுக்கல் ஆக்கி அரைத்திடிக்க
அம்மாவின் தேவைக் களிக்கின்றோம்; இன்னும்
குளக்கரையில், ஆற்றில் குளிக்கத், துணிகள்
வெளுக்கத் துவைக்க விதவித மான
படித்துறைகள், தாண்டுதற்குப் பாலங்கள், பாரில்
இடித்தாலும் வீழா இரும்பனைய வீடுகளும்,
தூண்கள், மதிற்சுவர்கள், ஆலங்கள் யாவும்மே
மாண்கலை யின்பமெலாம் வாய்ந்தொளிரும் சிற்பமும்
செய்து, பயனுற்றுச் சீரடைகின் றோம் எனினும்,
செய்தியிது கேட்டிடுவீர்! அம்மலையைச் சேர்ந்தவொரு
கற்றுண்டின் மேலேறிக், கால்வைத் தொருசிற்பி
சிற்றுளியால் கண்மூக்குச் செப்பனிட்ட பின்னர்,
உருவான கல்லை உமாபதியென் றாக்கித்,
திருவெலாம் ஈயவல்ல தெய்வமென்று கூறி,
முகில்முட்டுங் கோபுரங்கள், மூன்றுமதிற் கோட்டை,
அகிற்புகையோ, டடியார் ஆரணங்கின் கூட்டம்,
இசைவழங்க எண்ணற்றார், இன்னும் மடைப்பள்ளித்,
திசைநான்கும் சுற்றிவரத் தேருடன் வாகனங்கள்,
அண்மையிலே மந்திரத்தை அர்ச்சித்துப் பூசிக்க
விண்ணுலகை விட்டுவந்த வேதியரின் கும்பல்,
பணிபுரியச் ''சூத்திரரிற்'' பல்கோடி, மற்றும்
அணிகளெலாம் பொன்வெள்ளி, ஆய்ந்த நவமணிகள்,
நித்திய பூசைக்கு நிலத்தின் பெரும்பாகம்,
எத்திப் பறிக்கவோ ஏராள மார்க்கங்கள்,
இவ்வளவும் ஏற்படுத்தி இன்னமும் போற்றுகிறோம்!
செவ்விய மேனாட்டார் சேர்ந்து சிரிக்கின்றார்!

வேதனையாற் கூறுகின்றேன், வெள்ளம் பெருகிவந்து
தீதனைத்தும் மாயஇந்தத் தீந்தமிழ் நாட்டை,யொரு
மண்மேடாய்ச் செய்தால் மனக்கவலை ஏதுமின்றிக்
கண்மூடிப் போய்விடலாம் காண்.

பெண்கள் பகுதி:

# பெண்களே பெண்களுக்கு உதவி!

[தூத்துக்குடி தோழியர் எஸ். என். ராஜபுஷ்பம்]

★


பல ஆண்டுகளாகப் பெண்களைப்பற்றிய குறைபாடுகளைத் தாங்கி, அக்குறைகள் நீங்க வழி காட்டியாயிருந்து வந்த நமது "குடி அரசில்" இடையில், உடனடியாகக் கவனிக்க வேண்டிய வேறு ஜோலிகளின் நிமித்தமாய்ப் பெண்களைப்பற்றிய செய்திகள் விடுபட்டுப் போயின. ஆனால் பெண்களின் விடுதலைக்கு முதன் முதலாகப்பாடுபட்டது நமது குடி அரசுதான் என்பதையோ, பெண்களைப்பற்றி எக்கருத்துகளைக் குடி அரசு தாங்கி வந்ததோ அதே கருத்துகள்தான் நாட்டில் இன்றும் தேவையான உயிருள்ள கருத்துகளாக நடமாடி வருகின்றன என்பதையோ, ஒருவரும் இல்லை என்று மறுக்க முடியாது மறக்கவும் முடியாது. அன்னை நாகம்மையார் மறைவிலிருந்து பெண்களின் விடுதலைப் போராட்டப் படையைத் திரட்ட, அன்னை நாகம்மையாரைப்போன்ற பெண்மணிகள் கிடைக்காமல் போனது, பெண்ணுலகம் மிகவும் வருந்தத்தக்கது என்பதுடன் அன்னையின் பிரிவு பெண்ணுலகிற்கு மாபெரும் நஷ்டம் என்றே சொல்லலாம். அன்னை நாகம்மையார் இன்றுவரையிலும் இருந்திருப்பார்களேயானால், பெரியார் அவர்கள் துவக்கியிருக்கும் "திராவிட நாடு திராவிடருக்கே" என முழக்கமிடும் படைவீரர்களிலே சரி பாதிப் பெண்களையாவது இடம் பெறச் செய்திருப்பார்கள் எனத் திட்டமாகக் கூறலாம். அந்த வகையில் வெற்றி பெறாது அன்னை நாகம்மையாரை இழந்தது பெரியார் அவர்களுக்குப் பெரும் நஷ்டம் என்பதுமட்டுமல்ல இயக்கத்திற்கே பெரும் நஷ்டம் என்றே கூறலாம். என் செய்வது? போனவைகளை நினைத்துப் பயனில்லை. இனி நடக்க வேண்டியதைக் கவனிப்பது நமது முதற் கடமை. அதுவும் குடி அரசு முன்போல் நம்மைக் கவனிக்க முற்பட்டு விட்டது. இனி நாம் தான் நம்மை நமது அடிமைத் தனத்திலிருந்து மீட்டுக் கொள்ள வேண்டும்.

சீர்திருத்த இயக்கத்தில், ஈடுபடாமல், சீர்திருத்தங்களைப்பற்றிக் கவலைப்படாமல் இருந்து வரும் வயது வந்த தாய்மார்களை இனித் திருத்துவதும், அவர்களின் மனப்போக்கை மாற்றுவதும் கடினமாகையால், சிறுமிகளைச் சீர்திருத்துவதில் கவனம் செலுத்தி வாலிபப் பெண்களாகிய நாமேதான் நம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும். ஏன்? முன்னணியில் நின்று வேலை செய்யவேண்டும்.

பொதுப்படையாக நம்நாடு ஆங்கிலேயனுக்கு அடிமை. ஆட்சியிலும் வாணிபத் துறையிலும் வடநாட்டானுக்கு அடிமை. சமுதாயத்திலே பார்ப்பனீயத்திற்கு அடிமை. இவ்வளவிற்கும் ஆடவர்களோடு நாமும் அடிமையாக்கப் பட்டிருந்தாலும் நாம் அந்த ஆடவர்களுக்கும் அடிமை ஆக்கப்பட்டிருக்கின்றோம். பார்ப்பனீயம் எவ்விதம் நம் சமுதாயத்தை மிலேச்ச சாதி....தீண்டப்படாத சாதி எனக் கீழாக்கி வைத்திருக்கின்றதோ அதைவிடப் பன்மடங்கு நம்மை நமது ஆடவர்கள் அடிமைச் சங்கிலியில் பிணைத்திருக்கின்றார்கள். பல ஆண்டுகளாகப் பெண்களை அடிமையில் ஆழ்த்திச் செயலில் நடத்தப்பட்டு வந்த காரணத்தால், அதை ஒரு சம்பிரதாயமாகக் கருதிப் பெண்களின் வாழ்க்கையையே இம்மாதிரிதான் எனவும் தலைவிதி எனவும் கூறப்பட்ட அளவோடு நம் வாழ்க்கையை நடத்த வேண்டியதாகி விட்டது. இவ்வித இன்னல்களுக்குள் அகப்பட்டு அவதிப்பட்டுக் கிடக்கும் பெண்களுக்குச், சமுதாயப் பிணைப்பின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை வாங்கித்தரப் பெரியார் அவர்கள் அரும்பாடுபட்டார்கள் தம் வாழ்க்கைத் துணைவியார் நாகம்மையாருடன். அந்த விடுதலை வேட்கையின் வாடை வீசிக்கொண்டிருக்கும் இத்தருணத்தை நாம் பயன்படுத்திக்கொண்டு, பெண்கள் விடுதலை வேட்கைத் தீயில் முழு மூச்சுடன் குதிக்க வேண்டும். இவ்விதம் முயன்று பெண்கள் விடுதலை பெறவேண்டும் எனக் கூறுவது, "ஆடவர்களை அடிமைக்குள்ளாக்க வேண்டும்" "அவர்கள் நம்மைப் படுத்திய தொல்லைகளுக்குப் பழிக்குப்பழி வாங்கவேண்டும்" என்ற மனோபாவத்துடன் கூறுவது அல்ல. மனம் பக்குவப்படாத ஆடவர்கள் "பெண்களின் இப்போக்கால் நாடு கெட்டு விடும்" என்று கூறினாலும் கூறுவர். பெண்களின் அறிவு வளர்ச்சி மக்களின் அறிவு வளர்ச்சி எனச் சுயமரியாதை உணர்ச்சியுடைய எவரும் நன்கு உணர்வர். அவர்கள் நமக்குத் துணையும் புரிவர்.

நாம் நமது குழந்தைப் பருவத்தில் குதூகலமாகத் தவழ்ந்து திரிகின்றோம். எவரும் எடுத்துக் கொஞ்சுவதற்கும் அனுமதிக்கப் படுகிறோம். பள்ளிப் பருவத்தில் குமரியாக வாழுங் காலத்திலும் சுதந்தரம் தரப்படுகிறது. (இது பருவத்திற்கேற்றமுறை) ஆனால் பருவமடைந்து வாழ்க்கைக்குப் பக்குவமானவுடன், அதுவும் வெளியுலகின் வளப்பங்களை அறியக்கூடிய பருவத்தில் பாழும் இருட்டறையில் தள்ளப்படுகிறோம். கொலை, கொள்ளை போன்ற அடாத செயல் புரிவோரை, அடக்குமுறைக்குள்ளாக்கப்பட்டுக் கைதிகளாக நடத்தும் போதுகூட சிறிது நேரமாவது அவர்களுக்கென ஏற்பட்டிருக்கும் வெளியில் உலாவ அநுமதிக்கப்படுகிறது. அந்த அளவுகூட உரிமை இல்லாத முறையில் பாழும் சமுதாயத்தால் நாம் நடத்தப்படுகிறோம். இவ்விதமான அடக்குமுறை சில ஆண்டுகளுக்

[தொடர்ச்சி 12ம் பக்கம்]



நாடகப் பகுதி:

# உண்மை இராமாயணம்.

[பெரியார் ஈ. வெ. ரா.]

## காட்சி 3.

[தசரதச்சக்கரவர்த்தி தன் மந்திரிகள் குருமார்களுடன் வீற்றிருக்கும் தர்பார்.]

தசரதன்:- (வசிட்டனைப் பார்த்து) குரு மகாராஜ்! எனக்கு அறுபதாயிரம் வருஷமாகியும், நான் அநேக மனைவிகளை மணந்திருந்தும் எனக்கு இதுவரை குழந்தைகள் இல்லை. எனது இராஜ்யத்துக்கு வாரிசு வேண்டாமா? பிள்ளையில்லாத காரணத்தால் நான் "புத்" என்னும் நரகத்தை அடையலாமா? முனி சிரேஷ்டரே! இதற்குத் தாங்கள் தான் பரிகாரம் சொல்லியருள வேண்டும்.

வசிட்டர்:- அரசே! பிள்ளை இல்லாவிட்டால் அசுவமேத யாகம் செய்து பிள்ளை உண்டாக்கிக் கொள்ளலாம் ஆதலால் உடனே யாகத்தைச் செய்யுங்கள்.

மந்திரி சுமந்திரன்:- அரசே! நமது குரு வசிட்டர் சொல்வது மிகவும் சத்தியமான வாக்காகும். "ருஷ்ய சிருங்கரை" அழைத்து அசுவமேத யாகம் செய்து தசரதர் புத்திரப்பேற்றை யடைவார்" என்று சனற்குமாரர் சொல்லியிருக்கிறார். அந்தக் காலம் இப்போது வந்து விட்டது.

தசரதன்:- குரு மகாராஜரே! தங்கள் கட்டளைப்படியே இதோ யாக காரியத்தைத் தொடங்குகிறேன். தாங்கள் கடைசிவரை கூடவே இருந்து காரியத்தை மேன்மையாகவும் வெற்றியாகவும் முடித்து வைக்கவேண்டும். மந்திரி! நமது குரு வசிட்டர் சொல்லுகிறபடி யாகத்துக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்யும்.

(யாவரும் போகிறார்கள்)

## காட்சி 4.

யாகக்காட்சி. ஆடு மாடு குதிரை பறவை பாம்பு முதலியன கொண்டு வந்து வைக்கப்பட்டிருக்கின்றன. ஓம குண்டம். அதைச்சுற்றி யாகப் புரோகிதர் மந்திரம் சொல்லல். அரசனின் மனைவியர் மூவர், யாகச் சடங்குகள் முடிந்ததும் குதிரை யோடு கட்டித் தழுவப் படுத்திருத்தல். பிறகு யாகப் புரோகிதர்கள் அரசன் மனைவியர்களை அநுபவித்தல். கர்ப்பம் தரித்தல்.

## காட்சி 5.

தர்பார்.

[தசரதன், மக்களுடனும் வசிட்டர் முதலானவர்களோடும் வீற்றிருந்து பிள்ளைகளின் இன்பம் அநுபவித்துக் கொண்டிருக்க விசுவாமித்திரர் வருகின்றார்.]

தசரதன்:- (எழுந்து மரியாதை செய்து) முனி சிரேஷ்டரே! வர வேண்டும். எனது பெரியோர்கள் செய்த பாக்கிய வசத்தால் தங்கள் பாதம் எனது குடிசையில் பட்டது. தங்களுக்கு என்ன வேண்டும்? கட்டளையிட்டால் செய்யக் காத்திருக்கின்றேன்.

விசுவாமித்திரர்:- அரசே! எவ் விருப்பற்றதையும் விட்ட எனக்கு என்ன வேண்டியிருக்கிறது? தேவர்கள் சார்பாகத் தங்களிடத்தில் ஒரு பிச்சைக்கு வந்திருக்கின்றேன்.

தசரதன்:- என்னிடம் தாங்கள் வந்து பிச்சை கேட்பது எனது பாக்கியமே யாகும். எது கேட்டாலும் கொடுக்கிறேன். கேளுங்கள்.

விசுவாமித்திரன்:- நான் செய்யும் யாகத்தை இராவணன் முதலிய இராட்சதர்களும் இராட்சதப் பெண்களும் வந்து கெடுத்து விடுகின்றார்கள். அதற்காக உனது மகன் இராமனைச் சிறிது நாட்களுக்கு என்னோடு அனுப்பிக் கொடுக்கவேண்டும்.

தசரதன்:- முனிபுங்கவரே! அது மாத்திரம் கேட்காதீர்கள். அவன் என் அருமை மகன். அவனை விட்டுப் பிரிந்து கணமும் உயிர் தரியேன். அன்றியும், அவன் சிறிய குழந்தை. இராவணன் மகா பலசாலி. ஆதலால் அவனைக் கொல்ல இராமன் பயன்பட மாட்டான். வேறு எது வேண்டுமானாலும்—இந்த இராஜ்யத்தை வேண்டுமானாலும் கேளுங்கள் தருகிறேன். அல்லது நான் வேண்டுமானாலும் வருகிறேன்.

விசுவாமித்திரன்:- (கோபம் பொங்கி) இதுதானா ராஜ தர்மம்? சொல்லிவிட்டுப் பேச்சு மாறுகிறாய். இராமன் சிறு பையன் என்றாலும் நாங்கள் அவனைத் தக்கபடி பயன்படுத்திக் கொள்ளத்தான் கேட்கின்றோம். இராமனுக்கு எவ்வித ஆபத்தும் வராமல் பார்த்துக் கொள்ளுவோம். கொடுக்கின்றாயா? இல்லையா? சாபத்தைக் காணுவாய்.

வசிட்டர்:- மகரிஷே! கோபிக்காதீர். இராமனைத் தங்களுக்குத் தரும்படி செய்கிறேன். (தசரதனைப் பார்த்து) மன்னவனே! இராமனை அனுப்பிக் கொடு. அவனுக்கு ஒன்றும் ஆபத்து வராது. அவனுக்கு மிக்க பெருமை ஏற்படும். எல்லாம்

(அடுத்த பக்கம் பார்க்க)

# கேள்வி கேளுங்கள்! ஆனால் கேட்கத்தகுந்ததைக் கேளுங்கள்.

★

[26-10-47ம் நாள் நடந்த பட்டணம் திராவிடர் கழகப் பொதுக்கூட்டத்தில் கேள்விகள் எவ்வாறு கேட்கப்பட வேண்டும்? என்பது குறித்துப் பெரியாரவர்கள் கூறிய பேருரை.]

## கேள்வி கேட்கும் பழக்கம்

கூட்டங்களில் கேள்வி கேட்பதுபற்றி நான் சில விஷயங்களைக் கூற ஆசைப்படுகிறேன். பொறுப்பற்ற முறையிலும் கூட்டத்திற்குச் சம்பந்தப்படாத விஷயங்களைப்பற்றியும் பல கேள்விகள் கேட்கப்படுவதால், இதுபற்றி விளக்கம் கூறுவது மிக அவசியமாகிறது. சொற்பொழிவாளர் பேசிய விஷயங்கள்பற்றி மட்டும் கேட்கப்படும் கேள்விகள்தான் ரெலெவென்ட் (Relevent) பொருத்தமான, சம்பந்தப்பட்ட, கேள்விகளாகக் கொள்ளப்படும். மற்றக் கேள்விகள் நாகரிகமற்றவர்களால்கூட, ஞானமற்றவர்கள், காலித்தனமாகக் கேட்பவர்கள் குழப்பத்துக்காக கேட்பவர்கள் சுலபத்தில் விளம்பரம்பெற ஆசைப்படுபவர்கள் மானத்தைப்பற்றிக் கவலைப்படாதவர் நல்ல கூறிய தன்மை கொண்டவர்கள் கேள்வி என்றுதான் சொல்லப்படக் கூடும்.

இப்படிப்பட்ட மக்களுக்கெல்லாம் புத்தி கற்பிக்கவே, ஒழுங்காக நடந்து கொள்ளும் வழியைக் காட்டிக்கொடுக்கவே, திராவிடக்கழகம் வேலைசெய்து வருவதால், அதிகப்பிரசங்கித்தனமான கேள்விகளைப்பற்றி, இவற்றை விளக்கிக் கூறவேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட பொருத்தமற்ற கேள்விகளைச் சாதாரணமாகத் தலைவர் அநுமதிக்கமாட்டார். எந்தக்கேள்விக்கும் ஏதாவது பதில் சொல்லிச் சமாதானம் செய்யவேண்டுமென்று கருதுவதாலும், இல்லாவிட்டால் கேள்வி கேட்டவர் நம்மை ஜெயித்துவிட்டதாகவோ அதற்குச் சமாதானம்கூற நம்மால் இயலவில்லையென்றோ தப்பாக நினைத்துக்கொண்டு போவார் என்பதற்காகவும், திராவிடர் கழகம் ஒன்றுதான் இதுவரை எப்படிப்பட்ட கேள்விகளையும் அனுமதித்து பதில் சொல்லி வருகிறது. நீங்கள் பத்திரிகையில் பார்க்கலாம், சொற்பொழிவாளர் பேசியது சம்பந்தமான கேள்விகள் கேட்கப்பட்டால்கூட காங்கரஸ் தோழர்களும், கம்யூனிஸ்ட் தோழர்களும் மந்திரிகள் உட்படப் பதில் சொல்லாமல் கூட்டத்தை சீக்கிரம் முடித்துக்கொண்டு நழுவி விடுவதை.

## பொருத்தமற்ற கேள்விகள்

கேள்வி கேட்பதும் அதற்குப் பதில் கூறப்படுவதும் மேல்நாட்டுப் பழக்கம். அங்கு மன்னரைத் தவிர்த்த யார் பேசினாலும், சொற்பொழிவாளர் தனது பேச்சை முடித்து உட்கார்ந்ததும், தலைவர் கேள்விக்கு 10நிமிஷம் அல்லது ஒரு நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதாகக் கூறிக் கேள்வி கேட்கும்படி சொல்வார். கூட்டத்தில் நடந்த சங்கதிகளைப்பற்றிக் கேட்பதுதான் ஒழுங்கான கேள்வி என்று கருதப்படும். உதாரணமாக இப்போது நான் பேசியதைக்கேட்ட பின்பு, என் சொற்பொழிவு முடிந்ததும் திராவிடநாட்டு ஜனத்தொகை 5கோடி என்றீரே, $4\frac{3}{4}$ கோடிதானே என்றும், திராவிடரை எப்படிப் பிரிப்பது என்றும் நீங்கள் கேட்கலாம். இது பொருத்தமானதாகக் கருதப்படும். அல்லது 'முன்பு, கோவைக் கூட்டத்தில் திராவிடநாடு ஒரிஸ்ஸா மாகாணத்திலும் ஒரு பகுதியைப் பிடிப்பது என்று கூறினீர்களே. இன்று சென்னை மாகாணம் தான் என்று கூறுகிறீர்களே? எது சரி" என்று கேட்கலாம். இதுவும் பொருத்தமான கேள்விதான். இதைவிட்டு 'உங்களுக்கு தாடி ஏன்?" 'அது ஏன் வெளுப்பு' என்று நீங்கள் இந்தக் கூட்டத்தில் கேட்பீர்களானால், இது பொருத்தமற்றதாகவும், குறும்புத்தனமானதென்றும் கருதப்படும். அல்லது எவனுக்காவது தவறான வழியில் மதிப்பு, விளம்பரம் வாங்கிக்கொடுக்க "குப்பனை ஏன் கூட்டிவரவில்லை" "சொக்கன் எங்கே காணோமே" என்று கேட்பது வெட்கங்கெட்ட, விளம்பரம் தேடும் கேள்வியாகும்.

## கேள்வி உரிமை கெடவேண்டாம்

ஆகவே தோழர்களே, இனி கேள்வி கேட்கும்போது சற்று யோசித்து, கூட்டத்தில் பேசப்பட்ட விஷயத்தைப் பொறுத்திருக்கிறதா? உங்கள் கேள்வி என்பதை முடிவு செய்துகொண்டு கேள்வித்தாளை அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறேன். கேள்வி உரிமையைப் பாழாக்கி விடாதீர்கள்; கேள்வி உரிமை இருந்தால்தான் பேசுகிறவர்கள் நாணயமாகப் பேசமுடியும். அதைக் கெடுத்து விடாதீர்கள். நான் கூட்டத்தில் பேசாத விஷயங்களைப்பற்றி உங்களுக்குச் சந்தேகங்கள் இருக்குமானால் அவற்றைத் தனிமையில் கேட்டுத் அறிந்து தெளிவடையவேண்டுகிறேன். மாணவர்கள் கனவான்களாக ஆகவேண்டும். தறுதலைகளாக, அதிகப்பிரசங்கிகளாக ஆகக்கூடாது. கூட்டத்தின் மதிப்பைக் கெடுத்துக்கொள்ளக்கூடாது. நான் எந்தக் கேள்விக்கும் எனக்குப் பட்டதை பதிலாகச் சொல்லிவிடுகிறேன். அதனால் பலர் பாதிக்கப்படக் கூடும். அதனால் அவர்களுக்கு வேண்டியவர்கள் மனம் புண்படும். ஆதலால் சொற்பொழிவுக்குப் பொருத்தமற்றதைக் கேட்காதீர்கள். (விடுதலை)

---

(5ம் பக்கத் தொடர்ச்சி)

தக்க முன்னேற்பாட்டின்மீது நடத்தப்படப்போகும் காரியங்களாகும். இராட்சத குலத்தை அழிக்க இராமனை ஒரு சாக்காகப் பயன்படுத்தவே கேட்கப்படுகின்றது. இராட்சதர்கள் ஒழிந்தால்தான் உங்களுடைய அரசு முதலியவைகள்கூட நிலைக்கும். இல்லாவிட்டால் உங்களுக்கெல்லாம்கூட ஆபத்துத்தான். அதற்காகத்தான் எங்கள் முயற்சிகள் எல்லாம். ஆகவே அட்டி சொல்லாமல் அனுப்பிக்கொடு. யோசிக்கவேண்டாம்.

தசரதன்:- (விசுவாமித்திரரை நோக்கி) முனிபுங்கவரே! மறுத்துச் சொன்னதற்கு மன்னிக்க வேண்டும். இராமன் என் பிள்ளையல்ல, தங்கள் பிள்ளை. அழைத்துக் கொண்டு போங்கள். ஆனால் அவனை ஒண்டியாய் அனுப்ப மனம் வரவில்லை. அவனது தம்பி இலட்சுமணனையும் சேர்த்து அனுப்புகிறேன். இருவரையும் அழைத்துப் போங்கள். (என்று இருவரையும் அனுப்பிக் கொடுக்கின்றான். பின் யாவரும் கலைகின்றார்கள்.)

---


## மணமகள் தேவை.

★

7500 ரூபாய் ஸ்தாவர சொத்தும், 95 ரூபாய் மாத வருமானமும், 24வயதுமுள்ள மணமாகாத இந்துவுக்கு, அழகும் படிப்புமுள்ள பெண் வேண்டும். எக்குலத்தினராயினும், கன்னி, விதவை எனும் நிலையினராயுமிருக்கலாம். போட்டோ அனுப்புதல் நலம். கடிதம் இரகசியமாய் வைக்கப்படும்.

P. S. மணி
(A-1) C/o குடியரசு, ஈரோடு.

# ஆரியனுக்கு நன்மையானால் ஆஸ்திகம் பார்ப்பானுக்கு பாதகமானால் நாஸ்திகம்

[கைவல்யம்]

☆

கடவுள் உண்டென்று அவரை வழிபடுவது ஆஸ்திகம், கடவுள் இல்லையென்று சொல்லுவது நாஸ்திகமென்று எல்லா நாட்டிலும் சொல்லப்படுகிறது. நமது நாட்டில் ஆஸ்திக நாஸ்திகத்தைப் பற்றிய விவகாரம் அப்படியல்ல. மூடப் பழக்க வழக்கங்களையும் கடவுளின் முகத்திலிருந்து ஒரு ஜாதி பிறந்ததென்றும், பாதத்திலிருந்து மற்றொரு ஜாதி பிறந்ததென்றும் என ஒத்துக்கொள்ளவில்லையேல் அவன் நாஸ்திகன் என்று சொல்லப்படுகிறான்.

சித், அசித் என்னும் தத்துவங்களும் அதன் ஒடுக்கமும் உற்பத்தியுமான கடவுள் தன்மையை விவரித்துக் காட்டும் வேத சுருதிகள் இந்துமதத்திற்குப் பிரமாணம். மற்றவைகளான ஸ்மிருதிகள், புராணங்கள், தந்திரங்கள் முதலியவைகள் பிரமாணங்களல்லவென்று இந்து மத உட்பிரிவினர் எல்லோராலும் ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது. வேத சுருதிகளை ஒத்துக்கொண்டு ஸ்மிருதி புராணங்களை ஒத்துக் கொள்ளாமல் அதிலுள்ள ஆபாசங்களை விட்டுவிடவேண்டுமென்று சொன்னவர்கள் எல்லோரும் நாஸ்திகர்கள் என்றே சொல்லப்பட்டு வந்திருக்கின்றனர். ஆனால் கடவுள் ஒருவர் உண்டென்று வாதித்து நிர்ணயம் செய்வதற்கு சுருதியின் வாக்கியங்களே பிரமாணம். வேதத்தின் உத்தரபாகமான ஞானகாண்டத்தில் தான் இந்து மதத்தின் அத்யாத்ம தத்துவங்கள் அடங்கியிருக்கின்றன என்று சொல்லப்படும். அதுவே நம் மதப்பெருமைகளெல்லாம் ஆதாரமாகக் காட்டப்படுகிறது. சுவாமி விவேகானந்தரும் மேனாட்டில் இந்த மதத்திற்கு சுருதியைப் பிரமாணம் காட்டினாரேயல்லாமல் ஸ்மிருதியால் யாதொன்றையும் நிலைநிறுத்தவில்லை.

பௌத்தர் விஷ்ணுவின் அவதாரமென்று சொல்லப்படுவது உங்களுக்குத் தெரியும். கடவுள் உண்டென்றும் இல்லையென்றும் அவர் சொல்லவில்லை. யாகாதி எக்கியங்களின் பலிகளால் மனிதனுடைய துக்கங்கள் தீரவில்லை, இதனால் மோட்சமும் சித்திக்காது. துக்க நிவர்த்திக்கு மனச்சாந்தமே பிரதானம். அதனால் எல்லா ஜீவர்களிடமும் அன்பாயிருக்கவென்று சொன்னார். அதனால் அவரும் அவருடைய மதமும் நாஸ்திகமென்று தள்ளப்பட்டது.

ஜயின மத ஸ்தாபகரான ரிஷப தேவரை விஷ்ணுவின் அம்ச அவதாரமென்று ஒப்புக்கொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள். பிற்கால மதத்வேஷத்தால் அவரும் அவரைச் சேர்ந்தவர்களும் மோசடியான மதத்தை உபதேசஞ் செய்பவர்களென்று மதாபிமானிகள் என்பவர்கள் புராணங்களில் எழுதி வைத்து அவர்களை நாஸ்திகரென்று துன்புறுத்திய கதைகளும் உங்களுக்குத் தெரியும். இலக்கிய இலக்கணம், நிகண்டு, காவியங்கள் முதலியவற்றைத் தமிழில் செய்து தமிழ் பாஷைக்கு ஸ்திவாரமாயிருந்தவர்களும் அவர்களே. வேள்வியை ஒத்துக் கொள்ளாததினால் "வேத வேள்வியை ஒத்துக்கொள்ளாதவர்கள்" என்று வேதத்தையும் வேள்வியோடு சேர்த்து வேதவேள்வியை தூஷிக்கிறார்கள் என்று அவர்களை நாஸ்திகர்களாக்கித் துன்புறுத்தினார்கள்.

அணுப்பிரமாணமென்னும் அற்புதமான சித்தாந்தங்களை ஸ்தாபித்த வைசேஷிகர்களும் வஸ்துவின் ஜாதி, திரவியம், குணம், ஸமவாயம் முதலிய பதார்த்தங்களின் நுண்ணிய பொருளாராய்ச்சி செய்த நையாயிகர்களும், அதனின்று பரமாணுத்துவ கோட்பாட்டை வெளியிட்ட சாங்கிய மதமும், பல தர்க்க நீதியான மீமாம்சா சாஸ்திரங்களும், இவ்வெல்லா விஷயங்களினுடைய தேர்ந்த முடிவென்று சொல்லப்படுவதாய், இந்து மதத்திற்கே பிரதானமென்று கருதப்படுவதாய், எல்லா ஆசாரியர்களாலும் வியாக்யானம் செய்யப்பட்டதுமான வியாச சூத்திரமும், அதற்கு நுண்ணிய ஆராய்ச்சியோடு எல்லா மதங்களையும் கண்டித்து வியாக்யானம் செய்த சங்கராச்சாரியர்களுடைய வேதாந்த மதமும் நாஸ்திக மதமென்றே சொல்லப்பட்டிருக்கிறது. சுவாமி விவேகானந்தர் அந்த மதத்தையே பிரசாரம் செய்தார் என்றும் அதைத் தவிர மற்றவைகளைப்பற்றிப் பிரசங்கம் செய்வதில்லையென்றும் அவர் மேல் குற்றம் சொன்னார்கள். அதற்கு அவர், "நான் எந்த தெய்வங்களைப்பற்றியும் எந்தச் சமயங்களைப்பற்றியும் பிரசங்கம் செய்வதில்லை, ஆத்மாவைப்பற்றிய பிரசங்கம் செய்கிறேன்" என்று தம் [illegible] பார்ப்பனர்களின் வைதிகக் கொள்கைகளை சென்னைப் பிரசங்கத்தில் அவர் சொன்னவுடனே பார்ப்பனர்கள் அவரைத் தள்ளி விட்டார்கள். அமெரிக்காவிலிருந்து வந்தவுடன் பார்ப்பன வீதியெல்லாம் பூரண கும்பமெடுத்தவர்கள், அவர் சென்னையை விட்டுப் போகும்போது அலட்சியமாகவிருந்து விட்டார்கள்.

சமயத்தின் பேரால் கடவுளைக் காட்டி, சமூகங்களுக்குள் உயர்வு தாழ்வு கற்பித்து, மூடச் சடங்குகளாலும் பிரயோஜனமற்ற கர்மங்களினாலும் மனிதனது பகுத்தறிவு தடைப்பட்டு, உலகத்திலுள்ள மனிதர்களுக்குள் அவமதிக்கப்படும் நம்மவர்கள் ஒற்றுமையாய் ஒழுங்குபட நிலையில்லாப் படிப்பு, பக்தி ஒழுக்கமில்லாத குருக்கள், புரோகிதன், ஆச்சாரியர்கள் முதலியவர்களின் உபதேசப் பிரகாரம் பிரார்த்தனை, வீண் செலவு செய்வதால் உபயோகப்படுவதில்லை. நாம் கும்பிடும் தெய்வம் அவ்வழகை ஏற்கவில்லை. கைம்மாறு தராமல் நம்மவர்களையே தண்டிக்கிறது. துயரங்களும் பெருகுகின்றன. வீண் கிரியைச் சடங்குகளுக்கிடையே நாம் வளர்க்கும் பிள்ளைகள் இவ்வுலக இன்பங்களுக்குப் பல்லைக் காட்டி இறந்து பரலோக நிழலைக் கண்டு நடுங்குகிறார்கள். நாம் நடக்கும் பாதையில் வளைவுதோறும் நாமே தடைகள் கட்டுவது நம்மவர்களின் வாழ்க்கைத் தொழிலாகவேயிருக்கிறது. அந்தத் தடைகளின் உயர்வையே புண்ணியமென்றும் பாரமார்த்திகமென்றும் கருதுகிறார்கள். இவ்விதமான அற்பமான ஆசாரங்களைத் தயங்காமல் அனுசரிப்பது கண்ணை மூடிக்கொண்டாலொழிய சாத்தியமில்லை, கண்ணைத் திறந்தாலோ உலக முழுவதையும் ஆளுகிற பொதுவான லோகவிதி நமக்குத் தென்படாமலிருக்காது. இந்தப் பெருவிதியை வசப்படுத்தினால் அதிலிருந்து அதிகாரம் செல்வம் விடுதலை என்ற பரிசுகள் கிடைக்கும். இந்த விதியை உறுதியான ஆஸ்திவாரமாகக் கொண்டு ஐரோப்பிய நவீன நாகரிகம் நிலைபெற்றிருக்கிறது. அதுபோல ராஜ்ய விடுதலைக்குப் பெருந் தொல்லையாகவிருக்கிற நமது சமயத்தில் விடுதலை பெற்று நிற்க வேண்டுமென்று சொல்ல வந்திருக்கும் சுயமரியாதைச் சங்கத்தையும் நாஸ்திகம் என்றே சொல்லுகிறார்கள்.

பிரம்மஞான சங்கத்தைச் சார்ந்தவர்களான கர்னல் ஆல்காட், பெசன்டு அம்மை, லெட்பீட்டர், அருண்டேல் முதலிய வெள்ளைக்காரர்கள் பார்ப்பனர்களின் சாஸ்திரப்படி மிலேச்சர்கள். முன் ஜென்மத்தில் பெசன்டு அம்மை பாப்பாத்தி அம்மாளாயும், கர்னல் ஆல்காட் முன் ஜென்மத்தில் ரிஷியாகவிருந்ததினாலும், லெட்பீட்டர் முன் ஜென்மத்தில் மகானாகவிருந்ததினாலும், அருண்டேல் பார்ப்பனியைக் கலியா

# நாங்கள் கூறவில்லை!

★

## கம்யூனிஸ்ட்டுக் கட்சியை ஏன் எதிர்க்கின்றேன்?

யுத்தகாலத்தில் தொழிலாளர்களுக்கு எந்தவிதச் சலுகைகளும் கொடுக்கச் சர்க்கார் தயாராயிருந்தார்கள். முதலாளிகள் கொள்ளை லாபமடைந்துவந்த காலமது. அப்பொழுது தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளையடைய நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருந்தது. அந்தச் சமயத்தில் முதலாளிகளுக்கும், ஏகாதிபத்தியத்திற்கும் கூலியாட்களாக நடந்து, தொழிலாளர் கிளர்ச்சியை நசுக்கித், தொழிலாளர்களை ஏமாற்றி துரோகம் செய்தார்கள் கம்யூனிஸ்ட்டுகள்.

வேறு கட்சிகள் தவறு செய்யவில்லை என்று கூறமாட்டேன். ஆனால் தவறு செய்வதை தனது ஏக உரிமையாகப் பாத்தியதை கொண்டாடுகிறது கம்யூனிஸ்ட்டுக் கட்சி. 1930ம் ஆண்டிலிருந்து வருஷத்திற்கு வருஷம் பச்சோந்திபோல் மாறும் பெருமை கம்யூனிஸ்ட்டுக் கட்சியையே சாரும்.

இப்படிக்கு,
அச்சுத்பட்டவர்த்தன்,
சோஷியலிஸ்ட் கட்சிக் கூட்டுக் காரியதரிசி.

## இதற்குப் பெயரா சுதந்தரம்?

கள்ள மார்க்கெட்டும், சர்க்கார் ஒழுங்கீனங்களும் பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்ததைப்போலவே இப்போதும் நிகழ்கின்றன. காங்கிரஸ்காரர்களை நிழல்போல் தொடர்ந்த போலீசாரும், சி. ஐ. டிக்களும் இவர்களை நீதிமன்றத்துக்கு அனுப்பாதது என்னைத் தெரிய

ணம் செய்து கொண்டதாம், பார்ப்பாருக்கு உத்தியோகம், உத்தியோகத்திலும் பார்ப்பனர், அவர்களிலிருந்தே சுவீகாரம் அந்த சுவீகாரப்பிள்ளையான கிருஷ்ணமூர்த்தி அய்யருக்குள்ளே மைத்ரேயர் அவதாரம் செய்திருத்தல் ஆகிய இத்தனை நியாயங்களும் சௌகரியங்களுமிருப்பதால் எல்லா மதங்களையும் கொண்டு நடப்பதாகச் சொல்லப்படும் பிரமஞான சங்கத்தை இதுவரையிலும் நாஸ்திகமாக ஒதுக்கித் தாற்றித்தள்ளவில்லை.

வில்லை. ஐ. சி. எஸ். உத்தியோகஸ்தர்கள் புதிய எஜமானர்களிடம் விஸ்வாசமாயிருந்தாலும், உண்மை எஜமானர்களாகிய பொதுமக்களிடம் பழைய மனோபாவத்தையே மேற்கொள்வதாகச் சந்தேகிக்கவேண்டியிருக்கிறது.

இப்படிக்கு,
கிருபாலினி,
விலகிக்கொண்டிருக்கும் ராஷ்டிரபதி.

## ஜவஹர்லால் முட்டாள்!

ஜெர்மானிய நாஜிகளின் நேர் அவதாரமாக விக்கிரகின்றது, அதன் ஆவலை நாம் எவ்வளவுக்கெவ்வளவு தணிக்கிறோமோ அவ்வளவு விழுங்கிக்கொண்டே வந்து ஆசியாவின் அமைதிக்கே ஆபத்தாய் முடிந்துவிடும். இன்று உறுதியான நடவடிக்கை எடுத்து, இந்த ஆபத்தை எதிர்க்கத் தயாராகாவிட்டால் சேம்பர்லேனைப் பிரதம மந்திரியாகக் கொண்டிருந்த இங்கிலாந்தைப்போல் முட்டாள் தனத்தின் பலனை அனுபவிப்போம்.

இப்படிக்கு,
ஷையார்.

## அஹிம்சை நமக்கு வேண்டாம்.

ஆக்கிரமிப்பு ஆசைகொண்ட இந்த நவீன உலகத்தில் வெறும் அகிம்சையைக் கொண்டு இந்தியா சுதந்திரமாக வாழமுடியாதென்பதையும் இந்தியாவுக்குப் பலமுள்ள ராணுவமும் சில பெரிய மத்தியத் தொழில்களும் இருக்கவேண்டும் என்பதையும் மறக்கக்கூடாது.

இப்படிக்கு,
இதுவும் அவரே.

## அஹிம்சை என்பது பலவீனமே

இந்தியாவில் நிகழும் ரத்தக் கிளறிகள் அசாதாரணமல்ல என்று அவர்கள் (அமெரிக்கர்கள்) கருதலாம். இந்தியாவில் நிகழ்வது சாதாரணமானதல்ல. இந்தியா பெற்றுள்ள சுதந்திரம் அஹிம்சைக்கே பெருமையளித்திருக்கின்றது என்பதை நாம் ஒப்புக்கொள்வதாயின், இந்தியாவின் அஹிம்சாப்போர் வெறும் பெயரளவானதுதான். உண்மையில், அது பலவீனர்களின் சாத்வீக எதிர்ப்பே. இதை நான் அடிக்கடிகூறி வந்திருக்கின்றேன். இதன் உண்மையை இந்தியாவில் நிகழ்ந்தவை மெய்ப்பித்திருக்கின்றன.

இப்படிக்கு,
மகாத்மா காந்தி.


## விளம்பர விகிதம்

ஒரு தடவைக்கு

| | | |
|---|---|---|
| முழுப் பக்கம் | ரூ. | 60-0-0 |
| அரைப்பக்கம் | ,, | 30-0-0 |
| அங்குலம் 1க்கு | ,, | 3-0-0 |

கோர்ட், சர்க்கார், முனிசிபாலிட்டி விளம்பரங்களுக்கு
அங்குலம் 1க்கு ரூ 6-0-0
நீடித்த விளம்பரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

விளம்பர மானேஜர்,
"குடி அரசு" ஈரோடு.


## ஆங்கிலத்தை அகற்றினால் அறிவிற்கு வளர்ச்சியில்லை.

ஆங்கிலபாஷை மூலமாகத்தான் நமக்கு இன்றும் உயர்கல்வி கிடைத்து வருகிறது. அந்தப் பாஷையில்தான் முற்போக்கான ஞானம் நமக்கு எல்லா விஷயங்களிலும் கிடைத்து வருகிறது. வைத்தியம், சட்டம், எஞ்ஜினியரிங், மின்சாரம், விவசாயம் முதலிய விஷயங்களில்மட்டுமல்ல, இதர அம்சங்களிலும் இந்த அதிர்ஷ்டம் நமக்கு இருந்தே வருகின்றது.

அவினாசிலிங்கம்,
மந்திரிசபை மாறியவுடன்
மாறாத கல்வி மந்திரி.

## இந்து என்பது இறக்குமதியே.

இந்து என்ற பதம் வேதங்களில் இல்லை. ஆனால் அலெக்சாண்டர் இந்தியாவின்மீது படையெடுத்து வந்தபோது ஆங்கிலம் பேசும் இந்தியர்கள் அழைக்கும் இந்தஸ் என்ற சிந்துவுக்கு கிழக்கில் வசிப்பவர்கள் இந்துக்கள் என்று அழைக்கப்பட்டனர். இவர்களின் மதம் ஹிந்துமதமாகி விட்டது

இப்படிக்கு,
மகாத்மா,
இல்லாத இந்துமதத்தின் காவலர்.

# மனிதன் ஒரு ஜீவப்பிராணியே

(பெரியார் ஈ. வெ. ரா.)

☆

உலகில் உள்ள ஒவ்வொரு ஜீவராசிகளும் தத்தம் சரீரத்தில் பற்றுக் கொண்டவைகளாகவே இருந்து வருகின்றன. அந்த சரீரப்பற்று என்பது சரீரமானது ஜீவித்திருப்பதற்கு ஆதாரமானது என்கின்ற தத்துவத்தினாலேயே ஏற்பட்டதாகும். தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முயற்சிக்காத ஜீவன் கிடையவே கிடையாதென்லாம். ஆனால் எல்லா ஜீவராசிகளும் என்றைக்காவது ஒரு நாள் ஜீவிப்பு அற்று செத்துப் போகும் என்பது மாத்திரம் அனுபவ சித்தாந்தமாகும்.

உலகிலுள்ள மற்ற எல்லா ஜீவராசிகளைப் போலவே மனித வர்க்கம் என்னும் ஜீவராசியும் ஒன்றாகும். ஒரு மனிதனும் ஒரு யானையும் ஒரு எறும்பும் ஒரு சிறு பேனும் பூதக்கண்ணாடி மூலம் பார்த்தறியக் கூடிய அதிநுட்பமான ஒரு கிருமியும் எல்லாம் ஒரே தத்துவத்தைக் கொண்ட ஜீவராசிகளாகும்.

ஆனால் அவை தோற்றத்திலும்—செயலிலும் வேறுபட்டிருக்கலாம். அப்படியானால் "மனிதனுக்கும் கழுதைக்கும் வித்தியாசமில்லையா?" என்று ஒருவர் கேட்கலாம். ஜீவத்துவத்தில் வித்தியாசமில்லை என்றுதான் பதில் சொல்லுவேன். ஏதாவது வித்தியாசம் உண்டு என்று சொல்லவேண்டுமானால், ஒரு நாய் ஜீவனுக்கும் ஒரு கழுதை ஜீவனுக்கும் என்ன வித்தியாச வித்தியாசமோ அந்தவிதமான வித்தியாசந்தான் உண்டு என்று சொல்லலாம். ஆனால் அவ்வித்தியாசம் அவற்றின் (உறுப்பின்) இந்திரியங்களின், சக்தியாகவோ, இருக்கலாம் என்றுதான் சொல்லவேண்டும்.

இன்னும் பேசப்போனால் தாவர வர்க்கங்களும் ஜீவவர்க்கங்களுங்கூட தத்துவத்தில், அதாவது உற்பத்தி தத்துவத்திலும், வாழ்வு தத்துவத்திலும், அழிவு தத்துவத்திலும், ஒரே தத்துவத்தை ஆதாரமாய்க் கொண்டு இருந்து வருகின்றன என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

வித்தின் மூலம் எப்படி மரம் செடிகள் புல் பூண்டுகள் உற்பத்தியாகின்றனவோ, அதுபோல ஆண்—பெண் சேர்க்கை வித்து மூலம் ஜீவப்பிராணிகள் உற்பத்தியாகின்றன. வித்தில்லாமல் எப்படி சில தாவர வர்க்கங்கள் உற்பத்தியாகின்றனவோ அதுபோல் தான் ஆண் பெண் சேர்க்கையில்லாமல் பல ஜீவவர்க்கங்களும் உற்பத்தியாகின்றன.

தாவர வர்க்கங்களில் ஒன்றுக்கொன்று வித்தியாசமும், மாறுபட்ட சக்தியும் இருப்பது போலவே ஜீவ வர்க்கத்தினிடமும் ஒன்றுக்கொன்று வித்தியாசமும், மாறுபட்ட சக்தியும் இருந்து வருகின்றது.

மனித ஜீவவர்க்கத்தினிடமுள்ள சில குணங்கள் எப்படி மற்ற ஜீவராசிகளுக்கு இல்லையோ, அதுபோலவே மற்ற ஜீவராசிகளுக்கு உள்ள சில குணங்கள் மனித ஜீவவர்க்கத்திற்கு இல்லாமல் இருப்பதையும் நாம் பார்க்கின்றோம்.

ஒரு கழுதைக்கும், ஒரு குரங்குக்கும் உள்ள வித்தியாசத்தைக் கணக்குப் பார்த்து, ஒரு குரங்குக்கும் ஒரு மனிதனுக்கும் உள்ள வித்தியாசத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்போமானால் மேற்கண்ட வித்தியாசத்தின் அளவு அதிகமாய்க் காண முடியாது.

ஆகவே மனித ஜீவன் ஜீவப்பிராணிகளில் எல்லாம் மேலானதென்றும்—தனிப்பட்டதென்றும் அதற்கு மாத்திரமே சில தனித்தன்மைகள் உண்டு என்றும், கருமம், மதம், மேலுலக வாழ்வு, கடவுள், கடவுள் தண்டனை, மன்னிப்பு, சன்மானம் ஆகியவை சொந்தமென்றும் மனிதனுக்கே சில உயர்ந்த தத்துவங்கள்—கடமைகள், பிரார்த்தனைகள், முதலியவை உண்டென்றும் சொல்வதில் ஏதாவது அர்த்தமிருக்க இடமுண்டா என்று பார்த்தால் இவை வெறும் கற்பனைகளென்கிற விளக்கும், மற்றும் "கடவுளுக்கு" மனிதனுக்கும் இருக்கும் சம்பந்தமும், பொறுப்பும் மற்ற ஜீவராசிகளுக்கு இல்லையென்று சொல்ல முடியுமா என்பதும் விளங்கும். அது போலவே "பாவமும் புண்ணியமும் சொர்க்கமும் கடவுள் பதத்தை அடையக்கூடியதன்மையும்" மற்ற ஜீவராசிகளுக்கு இல்லையென்று சொல்ல முடியுமா? என்பதும் விளங்கும்.

ஒரு பூச்சியின் செய்கைக்கு 'பாவம்' 'புண்ணியம்' உண்டானால்தான் ஒரு மனிதனின் செய்கைக்கும் பாவம் புண்ணியம் உண்டாக முடியும்.

மனிதனுக்குள்ள பகுத்தறிவு என்பது கடவுளால் தனிப்பட்ட காரியத்துக்காகக் கொடுக்கப்பட்டது என்றால், ஒரு யானைக்குள்ள தும்பிக்கையையும், ஒரு நாரைக்குள்ள நீண்ட மூக்கையும், ஒரு முள்ளம்பன்றிக்கிருக்கும் செதில் முட்களையும், தேளுக்குள்ள கொடுக்கையும், பாம்புக்குள்ள விஷத்தையும் போன்றவைகளெல்லாம் கடவுளால் தனிப்பட்ட காரியங்களுக்காகக் கொடுக்கப்பட்டவை என்றுதானே சொல்லவேண்டும். ஆதலால் ஒரு யானைக்குத் தும்பிக்கை விசேஷ உறுப்பாகவும் நீண்ட அவயவமாகவும் இருப்பது போலவே மனிதனுக்கு 'பகுத்தறிவு'க்குள்ள நம்புக்கூட்டும் மூளையின் பரிமாண—அதாவது அதிக சிந்தனா சக்திக்குள்ள உறுப்பான் என்பவை விசேஷ உறுப்பாகவோ, விசேஷ சக்தியாகவோ இருக்கிறதென் பதேயல்லாமல் அதற்கு மாத்திரம் ஒரு தனி விசேஷத்துவம் இல்லை என்பதே எனது அபிப்பிராயம்.

உதாரணமாக ஜீவப்பிராணிகளுடைய இந்திரியங்களின் விசேஷத்தை எடுத்துக் கொள்வோமானால் ஒரு எறும்புக்கு இருக்கும் மூக்கு மோப்ப சக்தி ஒரு மனிதனுக்குக் கிடையாது. உதாரணமாக சர்க்கரையோ, பிஸ்கோத்தோ ஒரு பெட்டிக்குள் இருக்குமானால் அதை மனிதனால் மோப்பத்தின் மூலம் கண்டுபிடிக்க முடியாது; ஆனால் ஒரு சிறு எறும்பு கண்டுபிடித்துவிடும். அதுபோலவே பட்சிகளின் (கண்) பார்வை சக்தி ஒரு மனிதனுக்கும் கிடையாது. உதாரணமாக சமீப தூரத்தில் இருக்கும் மனிதனுக்குத் தெரியாத ஒரு வஸ்துவானது பூமிக்குமேல் ஒரு மைல் இரண்டு மைல் உயரத்தில் பறக்கும் பட்சியின் மிகச் சிறிய கண்களுக்குத் தெரிகிறது. அப்பட்சியால் அது தூக்கிச் செல்லப்படுகின்றது. மீனுக்கு இருக்கும் நீந்தும் சக்தி மனிதனுக்கு இல்லை. உடும்புக்கு இருக்கும் பிடித்துக்கொள்ளும் அவயவ சக்தி மனிதனுக்கு இல்லை.

இதுபோலவேதான் ஒரு விஷயத்தில் மனிதனுக்குள்ள மூளை அவயவத்தின் சக்தி மற்ற ஜாதுக்களுக்கு இல்லை என்று சொல்லவேண்டும். இந்த வித்தியாசங்களெல்லாம் அமைப்பில் ஜீவனுக்கு ஜீவன் மாறுபட்டிருப்பது போன்ற ஒரு வித்தியாசமே தவிர, மனிதனுக்கு மாத்திரம் ஏற்பட்ட ஒரு தனித்தத்துவ உயர்குணம் என்று சொல்லிவிட முடியாது.

[தொடர்ச்சி 12ம் பக்கம்]

---

அரையே அரைக்கால் வருஷத்தில் திராவிடனுக்கு அநியாயமான அபராதம்.

☆

ராணுவச் செலவு 92½ கோடி

அகதிகள் செலவு 22 „

திராவிடா! உனக்குச் சம்பந்தமில்லை. ஆனால் உனக்குக் கடனில் பங்குண்டு. இது ஏன்?

குடி அரசு

29—11—47 சனிக்கிழமை.

# தேசியத் தாள்களின் தெகிடுதத்தம்.

☆

சென்னைத் திராவிடக் கழகத்தின் சார்பாக நகைச்சுவையரசர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களுக்கு, சென்ற 24ந்தேதி நடந்த பாராட்டு விழாக் கூட்டத்தையொட்டி ஒரு ஊர்வலம் நடைபெற்றதாகவும், அந்த ஊர்வலத்திற் கலந்து கொண்ட தொண்டர்களும் பொது மக்களில் பலரும் ஊர்வல முடிந்து கலைந்து வரும் போது கொல்லவார் அக்கிரகாரம் தெருவிலுள்ள கணேசர் அலுமினியத் தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிலாளர்கள், முன் ஜாக்கிரதையுடன் எல்லாவிதமான ஆயுதங்களுடனுமிருந்து தாக்கிப் படுகாயப்படுத்தினர் என்பதாகவும், இக்கலவரத்தைத் தடுத்து மக்களைக் காப்பாற்ற வந்த போலீஸ் அதிகாரிகளையும் தாக்கி அவர்களின் மோட்டார்க்காரையும் பழுதாக்கி ஏக அட்டகாசம் செய்தனர் என்பதாகவும், இந்தத் தொழிற்சாலை ஒரு வடநாட்டானுக்குச் சொந்தமானது என்பதாகவும் நாம் அறிகின்றோம். தொழிலாளத் தோழர்கள், வடநாட்டானுக்குச் சொந்தமான தொழிற்சாலையில் வேலை செய்கிறவர்கள் என்பதை அறிகிறபோது, அத்தோழர்கள் குழப்பமும் காலித்தனமும் செய்தது பற்றி யாரும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை.

ஆனால் இந்த நாடகத்தைப் பற்றிக் காங்கிரஸ் பத்திரிகைகள் நடந்து கொண்டிருக்கும், யோக்கியதையும் நாணயமும் இல்லாத போக்கைப்பற்றிப் பொது மக்கள் உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். காங்கிரஸ் பத்திரிகைகள் என்பது பார்ப்பனப் பத்திரிகைகள்—பார்ப்பன அடிமைப் பத்திரிகைகளாகவே இருந்து வருகின்றன என்பது ஒரு பக்கமிருந்தாலும் அவர்கள் நடந்து கொள்ளும் நேர்மையற்ற காரியங்களுக்கு எதாவது எல்லை இருக்கிறதா? என்பதைப் பொது மக்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்பதற்காகவே இவற்றை எடுத்துக்காட்ட வேண்டியவர்களாயிருக்கின்றோம்.

சுதேசமித்திரன்:—

நேற்றுமாலை ராபின்சன் பார்க்கில் நடந்த கூட்டத்திற்கு வந்துகொண்ட சுமார் 1000 கருப்புச்சட்டையினர் ஊர்வலமாகச் சென்றுகொண்டிருக்கையில் ஒரு கலவரம் நடந்தது. அவர்கள் எழுப்பிய கோஷங்களால் சிலர் ஆத்திரமடைந்ததால் அக்கலவரம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. கற்களும் சோடாபுட்டிகளும் உபயோகிக்கப்பட்டனவாம். 5 கருப்புச் சட்டைக்காரர்களுக்கு காயம் ஏற்பட்டது. ஒருவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். இருவரை போலீஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி கலவரம் வண்ணாரப்பேட்டையில் 5—30 மணிக்கு நடந்தது. கருப்புச்சட்டை ஊர்வலத்தினர் கணேஷ் அலுமினியம் தொழிலாளர் சங்கத்திற்கு முன் போகையில் அக்கூட்டத்தின் கோஷங்களைக் கேட்டு ஆத்திரமடைந்த சிலர் கருப்புச்சட்டையினர் மீது கற்கள் எறிந்ததாகக் கூறப்படுகிறது. இருதரப்பினரும் கற்கள் சோடாபுட்டிகள் முதலியவற்றை வீசியதாகவும் சொல்லப்படுகிறது.

பந்தோபஸ்துக்காகச் சென்ற போலீஸ் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ வீ ஆர் பாபாவுடைய கார் தாக்கப்பட்டு கண்ணாடியும் விளக்குகளும் உடைந்து விட்டன. உடைந்த கண்ணாடி துண்டால் இன்ஸ்பெக்டர் காலில் சிறிது காயமேற்பட்டதாம்.

மணிகார் சத்திரம் தெருவில் ஒரு வீட்டிலிருந்து கற்கள் வீசியதாக ஏகாம்பரம் சின்னப்பன் என்னுமிருவரை போலீஸார் கைது செய்துள்ளனர்.

கருப்புச்சட்டையினரில் சாய்பு தம்பி பாய் என்பவருக்கு பலத்த காயம் ஏற்பட்டு ராயபுரம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

போலீஸ் டெபுடி கமிஷனரும் உதவி கமிஷனரும் ஸ்தலத்தை பார்வையிட்டனர்,

என்று 25ந்தேதி பத்திரிகையில் 2வது பக்கத்தில் வெளியிட்டிருக்கிறது.

பாரததேவி:—

"காங்கிரஸை ஆதரிப்பவர்களுக்கும் கருப்புச் சட்டைக்காரர்களுக்கும் கைகலப்பு; கற்கள் சோடாபுட்டி பறந்தன; 5- கருப்புச் சட்டைக்காரர்களுக்குப் பலத்த காயம்........காங்கிரஸ் எதிர்ப்புக் கோஷம் போட்டுக்கொண்டு சிறு சிறு கோஷ்டிகளாகச் சென்றனர்! அலுமினியம் தொழிலாளர் யூனியன் கட்டிடத்தை அணுகும்போது அங்கிருந்த காங்கிரஸ் ஆதரவாளர்கள், காங்கிரஸ் எதிர்ப்புக் கோஷங்களைக்கேட்டு கோபமடைந்து அவர்களும் எதிர்க்கோஷம் போட்டனர். பேச்சுகள் முற்றவே கற்களும் சோடாபுட்டிகளும் வீசப்பட்டன. கருப்புச்சட்டைக்காரர்கள் மீது கற்களை வீசி எறிந்தனர். போலீஸ் இன்ஸ்பெக்டருக்குக் காயம் அவர் காருக்குச் சேதம். இருவர் கைதாகி ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர்"

என்ற கருத்துக்களை மட்டும் 25ந் தேதி பத்திரிகையில் 5வது பக்கத்தில் வெளியிட்டிருக்கிறது.

இந்தியன் எக்ஸ்பிரஸ், தினசரி முதலிய பத்திரிகைகளும் இச்செய்தியை 'மித்திரன்' 'தேவி' முதலியவற்றைப் போலவே வெளிப்படுத்தியிருக்கின்றன என்றாலும் கருப்புச் சட்டையினரின் கோஷத்தை விவரிக்கும் போது பார்ப்பான் ஒழிக, மந்திரி ராஜா ஒழிக என்று கோஷித்ததாக மற்றவைகளில் காணப்படாததைத் தினசரி வெளியிடுகிறது; கல், செங்கல், கண்ணாடித் துண்டு, ஓடுகள், சோடா புட்டிகள் ஆகியவை இரண்டு கட்சியினராலும் தாராளமாக ஒருமணி நேரம் வரை பரிமாறிக்கொள்ளப்பட்டது என்று வற்புறுத்திக் கூறுகிறது இந்தியன் எக்ஸ்பிரஸ்.

இந்து பத்திரிகை இச்செய்தியையே போடாமல் ஒரே இருட்டடிப்புச் செய்திருக்கிறது.

மெயில். 26தேதி 3ம் பக்கம் 4ம் பத்தியில் கடைசிப்பாராவில் சங்கத்திலிருந்து தடிகள் கைப்பற்றப்பட்டன என்ற தலைப்பில்,

"ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கருப்புச்சட்டை ஊர்வலத்தில் தொண்டர்கள் மீது கல்லெறிந்த இடமாகிய பாத்திரத் தொழிலாளர் சங்கக் கட்டிடத்திலிருந்து ஏராளமான மூங்கில் தடிகளை வண்ணாரப்பேட்டை டிவிஷன்

"போலீசார் கைப்பற்றியதாகக் கூறப்படுகின்றது"

என்று வெளியிட்டிருக்கிறது.

விடுதலை:—

ஊர்வலம், நடந்துவரும் வழியில், ஊர்வலத்தில் பற்பல பகுதியில் பெரியார் வாழ்க! திராவிடநாடு திராவிடருக்கே! வடநாட்டு, பாசிச பட்டேலிசம் ஒழிக! குதிரைப் பந்தயம் ஒழிக! மார்வாரியே வெளியே போ! குஜராத்தியே வெளியே போ! சிந்தியனே வெளியே போ! பஞ்சாபியே வெளியே போ! உயிரைக் கொடுத்தேனும் திராவிடநாட்டை அடைந்தே தீருவோம்" என்ற சுலோகங்களை மட்டுமே கோஷித்துக்கொண்டு சென்றனர்.

ஊர்வலம் கலைந்து, பொதுக்கூட்டத்திற்கு வரும் வழியில் கொக்கலவார் அக்ரஹாரம் தெருவில், கணேசா அலுமினியப் பாக்டரி தொழிலாளர் சங்கம் இருக்கின்ற கட்டிடத்தின் ஓடுகள்போட்ட மேல்கூரையில் முன் ஏற்பாட்டின்படியே, சில காங்கரஸ் காலிகள் தயாராக உட்கார்ந்திருந்தனர். வழியே சென்றுகொண்டிருந்த தோழர்களை "பட்டேலிசம் வாழ்க" என்றும், "திராவிடனே ஒழிக" "காந்திக்கு ஜே" என்றும், கோஷித்துக்கொண்டும் கட்டியிருந்த துணிகளை விலக்கிக்கொண்டு நிர்வாண கோலத்தையும் காட்டினார்கள். ஓட்டின்மீதிருந்த அவர்களது நண்பர்கள் சரமாரியாக ஓடுகளை, சும்மா தெருவில் சென்றுகொண்டிருந்த தோழர்கள்மீது வீசினர். அவ்வட்டத்து இன்ஸ்பெக்டரும், நாலைந்து போலீசாரும் எவ்வளவோ தடுத்தும், ஓடு வீச்சும், கல்வீச்சும், சோடாபாட்டில் வீச்சும், நிறுத்தப்படமுடியாமல் போய்விட்டது. இதற்குள் ஐம்பது காலிகள் நூறு காலிகளாகப் பெருகிவிட்டனர். போலீசாருக்கும், இன்ஸ்பெக்டருக்கும் காங்கரஸ் காலிகளால் நல்ல கல்வீச்சுக் காயங்கள்; அதுமட்டுமல்ல இன்ஸ்பெக்டரின் காருக்குப் பலத்த சேதம். தன்மானத் திராவிடத் தோழர்கள் ஆறு பேருக்கு பலத்த காயம். நமது தோழர்களைப் பொறுத்துக்கொள்ளுமாறும் ஆத்திரப்படவேண்டாமென்றும் தோழர் கோவிந்தசாமி வேண்டிக்கொண்டார். தோழர் தங்கவேலரும் தோழர்களை வேண்டிக்கொண்டு பொதுக்கூட்டத்திற்கு வற்புறுத்தி அழைத்து வந்துவிட்டனர். கழகக் கொடிகள் பல காலிகளால் கிழிக்கப்பட்டன. காங்கரஸ் காலிகள் செய்த அட்டகாசம் இரண்டு பர்லாங்கு அளவுக்கு தெருவெல்லாம் ஓடுகளும், கற்களும், சோடாபாட்டில் துண்டுகளும் சிதறிக்கிடந்தன.

போலீஸ் இன்ஸ்பெக்டர் பாபா, டெலிபோன்செய்து ரிசர்வ் பட்டாளம் வரும்படி ஏற்பாடு செய்துவிட்டு, பல போலீசாருடன், ஷை அலுமினியம் தொழிலாளர் சங்கத்திற்குச் சென்று அங்கு வைத்திருந்த பெருவாரியான எண்ணிக்கையுள்ள தடிகள் ஆயுதங்களை போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுவந்தார். மேலும் வேறொரு வீட்டின் மீதிருந்து கல்வீச்சு செய்த இரண்டு காலிகளை போலீசார் பிடித்து கைது செய்துள்ளனர். மற்றைய காலிகளைத் தேடிக்கொண்டிருக்கின்றனர்,

என்று 24ம் நாள் பத்திரிகையில் முதல் பக்கத்தில் இக்கலவரச் செய்தியை வெளியிட்டிருக்கிறது.

(1) தொழிற்சங்கத்தினர் முன்னேற்பாட்டின் மீது கருஞ்சட்டையினரைத் தாக்கினர்.

(2) அதற்கு அடையாளமாகப் பல ஆயுதங்களைத் தொழிற் சங்கத்திலிருந்து கைப்பற்றினர்.

இது விடுதலை தரும் செய்தியின் சாராம்சம். இதை அப்படியே ஆதரிக்கிறது மெயில் பத்திரிகை. ஆனால் காங்கரஸ் பத்திரிகைகளோ,

(1) பார்ப்பான் ஒழிக! பனியா ஒழிக! மந்திரி ராஜன் ஒழிக! என்று கோஷித்த எதிர்ப்புக் கோஷங்கள் கலவரத்திற்குக் காரணம். இருதரப்பினரும் ஆயுதங்கொண்டு பரிமாறிக் கொண்டார்கள் என்று கூறுகின்றன.

ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதை இவைகளில் ஒன்றுகூட வெளியிடவே யில்லை.

கருப்புச் சட்டையினரின் கோஷங்கள் ஆத்திரத்தை மூட்டி அதனால் கலவரம் விளைந்தது என்றால், அதாவது எதிர்பாராத நிலையில் கலவரம் நடந்தது என்றால் சங்கத்தில் ஆயுதங்களிருந்து அவைகள் போலீசாரால் கைப்பற்றப் பட்டதற்குக் காரணம் என்ன? எப்பொழுதுமே அங்கு ஆயுதங்களிருக்குமா? அதைக் கையாளுவதற்காக ஐம்பது நூறு ஆசாமிகள் அங்கேயே யிருப்பார்களா? அப்படியானால் அவர்களுக்கு அதே தொழிலா?

காங்கரஸ் பத்திரிகைகள், தங்களின் ஆட்சி இப்பொழுது நடைபெற்றுவருகின்றது; அதை எதிர்ப்பவர்கள் அழிக்கப்படவேண்டியவர்களே என்ற ஒரே முடிவிற்கு வந்து கட்டுப்பாடாக இக்காரியத்தைச் செய்திருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டவே இங்கு

## உடனே தேவை.

★

கம்பாசிட்டர்களும், பைண்டர்களும், மிஷின்மேன் ஒருவரும் தேவை. விபரங்கட்கு எழுதவும்.

மானேஜர்,
தமிழன் அச்சுக்கூடம், ஈரோடு.

பத்திரிகைகளின் செய்திகளை விளக்கமாக எடுத்துக்காட்டினோம்.

நாட்டிலுள்ள பொதுமக்கள் கருஞ்சட்டையினரை வெறுக்க வேண்டும். அப்படி வெறுத்தால் தான் தங்களுக்கு வாழ்வு என்று உறுதியாய் நம்புகின்றன காங்கரஸ் ஏடுகள்.

கருஞ்சட்டையினர் கலவரத்தை எழுப்பியதினால் அதாவது ஆத்திரத்தை உண்டுபண்ணத்தக்க சுலோகங்களை கோஷித்ததால் கலவரம் விளைந்தது என்று ஒருமுகமாக மக்களுக்குக்கூறி, அரசாங்கமும் அவ்வாறே இதை ஏற்கவேண்டும் என்பது இவைகளின் கருத்தாகும் என்று இவைகளிலிருந்து எவரும் சுலபமாகத் தெரிந்துகொள்ளலாம்.

பெரியாரவர்கள் அந்த மாநாட்டில் கலந்துகொண்டாலும் அந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டாலும் முதலாவதாகவும் முக்கியமாகவும், "ஒழிக கோஷங்களை ஒலிக்கவேண்டாம்" என்றே வற்புறுத்தி வருகின்றார்கள் என்பதையும் அந்த வற்புறுத்தலுக்கிணங்கவே தொண்டர்கள் நடந்து வருகிறார்கள் என்பதையும் தப்பித்தவறி யாரேனும் ஒருவரிருவர் எங்கேனும் கோஷித்தாலும் உடனே கோபங்கொண்டு ஊர்வலத்தில் கலந்துகொள்ள விருப்பமின்றி, காரைவிட்டு இறங்க முயலுவதையும், தொண்டர்கள் தங்கள் செயலுக்கு வெட்கப்பட்டு உடனே மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, இனி ஒலிக்கமாட்டோம் என்று உறுதிகூறி அவ்வாறே நடந்து வருவதையும் இந்த நேரத்தில் நாம் வற்புறுத்திக்கூற ஆசைப்படுகின்றோம்.

மேலும் எங்காவது கலவரம் குழப்பம் என்ற பேச்சு வந்தாலும், அவ்வப்போது இயக்கத் தோழர்களுக்கு, நீங்களும் கல

வரத்தில் இறங்கிவிடாதீர்கள் என்றும், நீங்களும் அவர்களைப் போலவே மூடத்தனமாய் அயோக்கிய முறையில் நடந்து கொண்டால் திராவிட இனத்திற்குத்தான் நஷ்டம் என்றும், உங்களோடு கலவரத்திற்கு வருகின்றவர்கள், பார்ப்பனர்களால் தூண்டிவிடப்பட்ட நம்மவர்களே தவிரப் பார்ப்பனர்கள் அல்ல என்றும் மற்றவர்கள் செய்யும் காலித்தனத்தைப் போல் நீங்களும் செய்ய விரும்பினால் உங்களுக்குத் திராவிடர் கழகத்தில் இடமில்லை என்றும் எங்கள் தலைவர் கூறி வந்திருக்கிறார்கள் என்பதையும் வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறோம்.

விடுதலையும் மெயிலும் கூறுவதுபோல முன்னேற்பாடாக இக்காரியம் நடக்கவில்லை என்றே வைத்துக் கொள்ளுவோம். கருப்புச் சட்டையினர் பார்ப்பான் ஒழிக! பனியா ஒழிக! என்று கோஷித்ததாகவே வைத்துக் கொள்ளுவோம். பார்ப்பானையும் பனியாவையும் ஒழிக என்று கூறியதினால் ஆத்திரம் உண்டாயிற்று என்றால் ஆத்திரம் யாருக்கு உண்டாக வேண்டும்? பார்ப்பானுக்கோ பனியாவுக்கோ ஆத்திரமுண்டாகி அவர்கள் கலவரஞ் செய்தார்கள் என்றல்லவா நடந்து இருக்க வேண்டும்? அலுமினியத் தொழிலாளர்களுக்கு இக்கோஷங்கள் ஏன் ஆத்திரத்தை யுண்டாக்க வேண்டும்? ஆத்திரம் அடைந்தவர்கள் தொழிலாளர்கள். அவர்கள் ஆயுதங்களைச் சங்கத்தில் குவித்து வைத்திருந்தார்கள் என்ற இவைகளைப் பொது மக்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

"சங்கத்தில் சில தொழிலாளர்கள் இருந்தனர். ஊர்வலம் கலைந்து சிலர் அவ்வழியாக வந்தனர். ஒருவருக்கொருவர் எதிர்ப்புக்கோஷங்களைக் கோஷித்து முடிவில் கை கலந்தனர். கை கலப்பில் கல், செங்கல், கழி, கண்ணாடித் துண்டு ஓடு சோடா புட்டி முதலியவைகள் இருதரப்பிலும் கையாளப்பட்டன" இது காங்கரஸ் பத்திரிகைகள் கூறும் சாராம்சம்.

இவைகள் கூறுகின்ற செய்திப்படியே தொழிற்சங்க தொழிலாளர் எண்ணிக்கையைக் காட்டிலும் தொண்டர்கள் பொது மக்கள் எண்ணிக்கை அதிகமென்றே தெரிகின்றது. இந்நிலையில் இரு கட்சியாரும் ஆயுதங்களைப் பறிமாறிக் கொண்டார்கள் என்று கூறுவதை உண்மையாகக் கொண்டால், காலிகளில் எத்தனை பேருக்குக் காயம்? என்ற கேள்விக்கு இவைகள் ஒன்றுமே சொல்லவில்லை. கருப்புச்சட்டையினர் அதிகமான ஆட்களாக இருந்தும், காலிகளைப் போலவே ஆயுதங்களைக்கொண்டு தாக்கியும்கூட, தொழிலாளர்களுக்குக் காயமுண்டாகவில்லை; ஆனால் கருப்புச் சட்டையினரில் ஐந்துபேருக்குப்படுகாயம், பலபேருக்குச் சிறு காயம் என்றால், ஒன்று கருஞ்சட்டையினர் தாக்கிய குறிகள் எல்லாம் தவறிப் போயிருக்கவேண்டும். அல்லது புராணங்களில் சொல்லப்படுவது போல தொழிலாளரின் உடம்புகள் காயமே படாத இரும்புத் தேகங்களாயிருக்க வேண்டும் என்ற உண்மையையும் பொது மக்கள் எண்ணிப்பார்க்கவேண்டும்.

வடநாட்டானின் கூலியாட்களாகப் பார்ப்பனீயத்தின் கையாட்களாக இருக்கும் சில திராவிடத் தோழர்களுக்கு பணத்தாசை காட்டி, அவர்களின் அறிவை மயக்கி, அறிவை மழுக்கிய காரணத்தால் நம் உடன் பிறப்பான திராவிடர்கள் என்ற உண்மையையும் கண்டுகொள்ள முடியாதவாறு, வெறுப்புவார்த்தைகள் என்ற திரையைப்போட்டுக் கண்களை மறைத்துவிட்டதினாலேயே இந்த அநியாயம் நடந்திருக்கிறதென்றும், இதற்கு காங்கரஸ் ஆட்சி நடப்பதினால் நாம் என்ன செய்தாலும் நமக்குத் தண்டனை கிடைக்கமாட்டாது என்ற நம்பிக்கை மிகப் பலமாக உண்டாக்கப்பட்டிருக்கின்றதென்றும், அந்நம்பிக்கையை வளர்க்கும் முறையிலேயே பத்திரிகைகளின் செய்திகள் காணப்படுகின்றன என்பதும், காங்கரஸ் பத்திரிகைகளிலிருந்தே நாம் தெளிவாக அறிகிறோம். இதைச் சிந்தனைத் திறமுடைய பொதுமக்களும் அவ்வாறே அறிவார்கள்.

நாம் காங்கரஸ் பத்திரிகைகளுக்குக் கூறுகிறோம். நடக்கின்ற ஆட்சியில் உங்களுக்கு எந்தெந்த விதத்தில் சலுகை காட்ட வேண்டுமோ, அவ்வளவு சலுகை காட்டப்படுகிறது. உங்களுக்குப் பத்திரிகை கோட்டாக்களையும் கொடுத்து நீங்கள் பகற் கொள்ளையடித்துக் கொண்டிருப்பதை சர்க்கார் பார்த்துக்கொண்டிருக்கிறது. காரணம் உங்கள் கட்சி சர்க்கார். அதற்கு நன்றியறிதலாக அதாவது நீங்கள் அடைந்து வரும் நன்மைகளுக்குப் பிரதியுபகாரமாக நாணயத்தையும் யோக்கியதையையும் கைவிட்டு, காங்கரஸ் சர்க்காரையும் அதற்கு ஆதரவான பனியாக் கொள்ளையையும் பார்ப்பனியச் சுரண்டலையும் கண்ணை மூடிக்கொண்டு ஆதரிக்கின்றது; மறுத்துப் பேசுபவர்களை, மக்கள் வெறுப்படையும்படியாகத் துவேஷப் பிரசாரம் செய்வது, என்கிற போக்கை வளர்க்கிறீர்களே, இப்போக்கு நல்லதல்ல என்று கூறுகின்றோம். இப்போக்கினால் மற்ற நாடுகளில் உண்டான அழிவுகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லி வருகின்ற நீங்கள், இதை உணராமல் இப்போக்கைக்கையாளுவது நல்லதா? இப்போக்கினால் இந்த நாட்டின் பெருங்கலவரத்திற்கு—பெரிய அழிவிற்கு விதை தூவி வருகின்றீர்கள். இதைத் தயவு செய்து உணருவீர்களாக!

பாசிசப் பட்டேலாட்சிக்கும் கூறுகிறோம். ஐயா! ஆட்சியாளர்களே! திராவிடக் கழகத்தின் நடவடிக்கைகளை எப்படி எப்படி ஒடுக்கவேண்டுமோ அப்படியெல்லாம் ஒடுக்கி வருகின்றீர்கள். திராவிடத் தோழர்கள் என்றால் அவர்கள் சீரழிக்கப்படவேண்டுமென்று எண்ணுகிறீர்கள். கலவரச் செயலுக்கும் காலித்தனத்திற்கும் பேர் போன கம்யூனிஸ்ட் காங்கரஸ்காரர்களையெல்லாம், சிறையிலிருந்து விடுதலை செய்கிறீர்கள். அதே நேரத்தில், அதே காரணத்திற்காக என்று கூறி உங்களால் சிறையில் அடைக்கப்பட்டவர்களை இன்னும் உள்ளுக்குள்ளேயே வைத்துத் தொல்லை தருகிறீர்கள். திரா

விட்ட கூட்டத்தை—அதன் நடவடிக்கைகளைத் தடுத்துக் கலவரம் செய்யும் காங்கிரஸ் கம்யூனிஸ்ட் காலிகளைக் குறித்துப் பொது மக்கள் கிளர்ச்சி என்று ஒரே புளுகாய்ப் புளுகுகிறீர்கள். உலகத்தில் சில நாடுகளில் உரிமைப் போரை ஒடுக்குவதற்கு ராணுவம் போதாமல் ஜெயிலிலிருக்கும் கைதிகளையெல்லாம் கட்டவிழ்த்துப் பொது மக்கள் மேல் சில சர்க்கார் ஏவியிருக்கிறார்கள். ஏவிய சர்க்கார் இறுதியில் அழிந்தொழிந்து பூண்டற்றுப் போனது என்பதை நீங்களும் படித்திருக்கிறீர்கள். அப்படியிருந்தும் தாங்கள் இருந்து ஆட்சி புரியும் தலை நகரிலேயே இந்த அக்கிரமம் இப்போது நடந்திருக்கிறது. மற்ற இடங்களில் நடந்த போதெல்லாம் திராவிடக் கழகத்தின் மீதே குற்றத்தைச் சுமத்தி, பின் வாய்மூடி மௌனிகளாக இருந்து விட்டீர்கள். இப்பொழுது என்ன செய்யப்போகிறீர்கள்? பழைய பாடங்களைத்தான் திருப்பிப்படிக்கப்போகின்றீர்களா? இவ்வாறு நீங்கள் படித்துவரும் போக்கு கடைசியில் உங்களுக்கே தொல்லையை, துயரத்தை, அழிவை நிச்சயமாகத் தந்துவிடும் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

காயமடைந்த நம் தோழர்களுக்குக் கூறுகின்றோம். நீங்கள் ஏன் திராவிடராகப் பிறந்தீர்கள்? பிறந்திருந்தாலும் மற்றவர்களைப் போலில்லாமல் ஏன் திராவிட இன உணர்ச்சியைக் கொண்டீர்கள்? இந்தப் பெரிய குற்றத்தைச் செய்த நீங்கள் இப்பொழுது கிடைத்திருக்கிற வெகுமதியைத் தாராளமாக வரவேற்றுக்கொள்ள வேண்டுமே தவிர நீங்கள் வருந்துவதோ அதற்கு மற்றவர்கள் அநுதாபம் கூறுவதோ, இந்தக் காங்கரஸ் ராமராஜ்ஜியமான ஆபத்தானசுயராஜ்ஜியத்தில் அங்கீகரிக்கப்படாத பெரும் பிழையாகும்.

இன்னும் எத்தனை நாளைக்கு, இந்த அக்கிரம அநியாயப் போக்கையும், மானமற்ற நடத்தையையும் அநுமதிக்கப் போகின்றாய்? என்பதுதான் கடைசியாகத் திராவிட இனத்தை நாம் கேட்டுக் கொள்ளும் கேள்வியாகும்.

## ஆரியம் வேறு திராவிடம் வேறே!

திருச்சி சமஸ்கிருத சாகித்ய பரிஷத்தின் பொதுக்கூட்டத்தில், தமிழ் நாட்டில் தமிழ் மொழியைப் போலவே சமஸ்கிருதத்திற்கும் மதிப்பளிக்கவேண்டுமென்று பல தீர்மானங்களை நிறைவேற்றப் பட்டது. அத்தீர்மானங்களுள்;

ஆரியக்கலையும் திராவிடக் கலையும் கலந்திருப்பதால் தமிழ் சமஸ்கிருதப் படிப்பைப் பிரிக்காமல் இருக்கவேண்டும் என்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாம். என்ன சொல்லுகிறீர்கள்

தமிழர்களே!

தமிழில் ஆரியக்கலை திராவிடக் கலை என்று திராவிடக் கழகம் பிரித்துக் கூறிவருவதை ஆட்சேபிக்கின்ற தமிழர்களே! பார்ப்பனப் பண்டிதர்களே இன்றைக்கும் கூறுகின்றனர், ஆரியம் வேறு திராவிடம் வேறு என்று.

கலந்தது உண்மை, அதுபோலவே பிரிக்கலாம் என்பதும் உண்மை. நாம் பிரிக்க வேண்டிய நிலைகூட இல்லை. வாழ்க்கையில் பிரிந்தே இருந்து வருகின்றது என்று திராவிடர் கழகம் கூறுகின்றது. இதை நீங்கள் ஒப்புக்கொள்ளத் தயங்குகிறீர்கள். ஆனால் ஆரியம் ஒப்புக்கொள்ளுகிறது எப்படி?

தமிழ்ப்படிப்பு சமஸ்கிருதப் படிப்பை பிரிக்காமல் இருக்கவேண்டும். இது தீர்மானம்.

தமிழ்ப் படிப்பின் வளர்ச்சி, நாளடைவில், தமிழ் தமிழ் என்று சொல்லாத் துறைகளிலும் தமிழையே தேடும். இந்தப் போக்கு வளர்ந்து விட்டால் தமிழல்லாதவை யெல்லாம்—கடவுள், மதம், சாஸ்திரம் ஆகிய எதுவாயிருந்தாலும் தமிழருக்குத் (திராவிடர்க்கு) உரியதல்ல என்ற நிலைமை ஏற்பட்டு விடும். ஆதலால் சமஸ்கிருதப் படிப்பைப் பிரிக்காமல் தமிழ்ப்படிப்பு இருக்க வேண்டும் என்று பார்ப்பனீயம் சொல்லுகிறது. நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

## தண்டச்சோற்றுப் பிண்டங்களுக்கு வெட்டிச் சோறு.

சீரழிந்த திருவாங்கூரில் சாரமில்லாத முறைஜபம் தொடங்கிவிட்டதாம். இது ஆறு வருஷத்திற்கு ஒரு தடவையாக, 1751ம் ஆண்டிலிருந்து மார்த்தாண்ட வர்மன் ஆட்சி முதல் நடந்து வருகிறதாம்.

8 நாட்கள் வீதம் 7 தடவை 56 நாட்களுக்கு இந்த முறைஜபம்; பிற்பகலில் சஹஸ்ரநாம ஜபமும், இரவில் ஜல ஜபமும் 48 நாட்களுக்கு நடக்கும்; இதற்கு மலபார் பக்கத்திலிருந்தும் ஆயிரக்கணக்கான நம்பூதிரிகள் வந்திருக்கிறார்கள் என்று பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

திருவாங்கூரின் இந்தப்போக்கு பரம்பரையானது என்பதும், நீண்டகாலமாக ஆரியமே அங்கு ஆண்டுவருகிறது என்பதும் திராவிடத் தமிழர்கள் அறிந்த உண்மை.

நாட்டுமக்களுக்குப் போதுமான உணவுப்பொருளைத் தரமுடியாத திருவாங்கூர் மன்னர்; ஒருவருக்கு 2½ அவுன்ஸ் அரிசியே தருகின்ற இந்த மண்டலாதிபதி, ஆயிரக்கணக்கான நம்பூதிரிகளைக் கூட்டி குறைந்தது 2 மாதத்திற்குத் தண்டச்சோறு அளிக்கின்றார் என்றால், அதுவும் இவ்வாறு நடப்பது மக்களின் பொறுப்பாட்சிக்குப் பிறகும் என்றால், இதற்குப் பெயர் பொறுப்பாட்சியா? மானங்கெட்டு நாட்டின் நிலை யறியாது மதியை நம்பூதிரி கைகளில் ஒப்புவித்துவிட்டு, மக்களுங்கூட இந்த அக்கிரமத்தை அனுமதித்துக் கொண்டிருக்கலாமா? பொறுப்பாட்சிக் கிளர்ச்சி என்ற புனிதப் போரை நடத்தியவர்கள் இதை நியாயமானது, நாணயமானது, மானமுள்ளது என்றே கருதுகிறார்களா? இந்தச் செயலைத் திருவிதாங்கூர் தமிழ்நாட்டுக் காங்கிரசும் ஆதரிக்கிறதா? அக்கிரமம்! அக்கிரமம்!!

## மறைவு

நம் மதிப்பியக்கத் தோழர் தஞ்சை ப. சி. பஞ்சநாதம் அவர்களின் முதல் மகள் ப. சிவகாமவல்லியம்மை 17-11-47ல் மறைந்துவிட்டார் என்பதை வருத்தத்துடன் ஒருதோழர் தெரிவித்துக்கொள்கிறார்.

---

எடின்பரோ பல்கலைக் கழகப் போராசிரியரான ஜேம்ஸ் யங் சிம்ப்ஸன் அவர்களால் 100 ஆண்டுகட்கு முன்னாலேயே குளோரோபாரம் கண்டுபிடிக்கப்பட்டதாம்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

குத்தானே, விவாகமானவுடன் தானாகவே இச்சுதந்தரம் கிடைத்துவிடுமே எனக் கூறுவோரு முண்டு. ஆனால் அந்தச்சில ஆண்டுச் சிறைவாசம் பெண்களின் வாழ்நாள் பரியந்தம் சித்திரவதை செய்து வாழ்க்கையையே பாழாக்கி விடுகிறது என்பதை மறந்துவிடுகின்றார்கள். ஒரு பெண்ணின் வாழ்க்கை இன்ப வாழ்க்கையாகச் செல்லவேண்டுமானால் அது அப்பெண்ணிற்கு வாழ்க்கைப்படக் கூடிய ஆடவரைப் பொருத்துத்தான் இருக்கிறது. அத்துணைவரும் மனதிற் கிசைந்தவராக இருத்தல் வேண்டும். இவ்விதம் மனதைக் கவர்ந்த மணாளனைத் தேர்ந்தெடுத்தால்தானே குடும்ப வாழ்க்கையில் இன்பம் காண முடியும்.

இந்த மாதிரியான வாழ்க்கையில் ஈடுபட இன்றையச் சமுதாயத்தின் சம்பிரதாயப்படி வீட்டினுள் அடைக்கப்பட்டுக்கிடந்தால் ஆடவர்களைப் பார்ப்பதெங்கே? அவர்களோடு பழகுவதெங்கே? உள்ளத்தை ஊடுருவிப் பரிசோதனை பண்ணுவதெங்கே? மனதிற்குப் பிடித்த மணவாளனை அடைவதுதான் எவ்விதம்? ஒன்றும் முடியாதே. இதற்கு நமது பெற்றோர்களே—தாய்மார்களே சனியன்களாகத் தடைக்கல்லாக இருக்கிறார்கள். எவ்வளவு காலத்திற்குத்தான் இவ்விதத்தொல்லைக் குட்பட்டுக் கிடக்கிறது? சமுதாயம் சீறுமே என்ற காரணத்திற்காக நாம் அஞ்சிச் சாவதா? பெற்றோர்கள் மனம் புண்படுமே என்பதற்காக நம் வாழ்க்கையை நாம் பாழ்படுத்திக்கொள்வதா? முடியாது, முடியவே முடியாது. எப்பாடுபட்டேனும் இந்த அடிமைப் பிணைப்பிலிருந்து நாம் விடுபட்டே தீரவேண்டும். இப்போராட்டத்திற்கு அதாவது பெண்களைத்தேர்ந்தெடுக்கும் உரிமை ஆடவர்களுக்கு இருப்பதுபோல, பெண்களும் ஆடவர்களைத்தேர்ந்தெடுக்கும் பொருப்பைப்பெறஅதற்காகப்பாடுபடப் பருவமடைந்த பெண்கள் மனத்துணிவு கொள்ள வேண்டும். அதற்கு விவாகமான, சீர்திருத்தக்கொள்கையையுடைய பெண்கள், பருவமடைந்த பெண்களுக்கு உதவி ஒத்தாசை செய்ய முன்வரவேண்டும் என்று பணிவோடுகேட்டுக்கொள்ளுகிறேன்.

(7ம் பக்கத் தொடர்ச்சி)

"பகுத்தறிவு என்பது மனிதனுக்கு மாத்திரந்தான் உண்டு; அது தனிக் காரியத்திற்காகக் கடவுளால் கொடுக்கப்பட்டது" என்று சொல்லப்படுவதனால் பகுத்தறிவு இருக்கின்றது என்கிற காரணத்திற்காக மனிதன் எந்த விதத்தில் மேலான நிலையில் உள்ளவனாய் இருக்கிறான் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். மற்ற "பகுத்தறிவில்லாத" ஜீவனுக்கு உள்ள என்ன "குறைகள்" பகுத்தறிவுள்ள மனிதனிடம் இல்லாமல் இருக்கிறதைக் காண்கின்றோம்?

ஆகாரம், நித்திரை, ஆண் பெண் சேர்க்கை ஆகிய தேவைகளில் மற்ற ஜீவன்களின் முன்ன தேவைகளே மனிதனிடமும் காணப்படுகின்றன; இன்னும் பேசப்போனால் மற்ற ஜீவன்களைவிட அதிகமாகவும் காணப்படுகின்றன, ஆசை என்கின்ற ஒரு "கெட்ட" குணம் மற்ற ஜீவன்களைவிட மனித ஜீவனிடம் அதிகமாகவே காணப்படுகின்றது. அதிருப்தி என்கிற "கெட்ட" குணம் மனிதனிடமே அதிகமாய் இருக்கின்றது. கவலை என்கின்ற "கெட்ட" குணமும் மனிதனுக்கே அதிகமாய் உண்டு. தன் இனத்தை அடிமைப்படுத்தி அதைக் கொடுமைப்படுத்தி வாழும் 'கெட்ட' குணம் மனித ஜீவனிடத்திலேயே அதிகமாய் இருந்து வருகின்றது. மற்ற ஜீவன்களுக்கு உள்ளது போன்ற வஞ்சகம் ஏமாற்றம் முதலிய குணங்கள் மனிதனிடத்திலேயே அதிகமாய் இருந்து வருகின்றன. தனக்குத் தெரியாததையும், புரியாததையும் பற்றி நம்புதல், பேசுதல், நம்பச் செய்தல் முதலிய மூடத்தன்மைக் குணம் மனித ஜீவனிடத்திலேயே அதிகமாய் இருந்து வருகின்றது. நம்பிக்கைக்கும், நடவடிக்கைக்கும் சம்பந்தமில்லாத குணம் மனித ஜீவனிடமே இருந்து வருகின்றது. ஒரே விஷயத்தில் இரண்டு விதமாய் நம்பும் சுயபுத்தியற்ற தன்மையும் மனிதனிடமே இருந்து வருகின்றது.

இதுபோன்ற அநேகவிதமான கெட்ட குணங்களை மனித ஜீவன் தனது பகுத்தறிவின் பயனாகவே உடைத்தாயிருக்கின்றது. ஆகையால் பகுத்தறிவின் "மேன்மையால்" மனித ஜீவன் சிறந்தது என்று எப்படிச் சொல்லிக்கொள்ள முடியும் என்பதே எனது கேள்வியாகும். மேலும், மேற்கண்ட காரணங்களாலும், மற்றும் பல காரணங்களாலும் மனித ஜீவன்களில் பெரும்பாலானவைகளை மற்ற ஜீவராசிகளைவிட இழிவுத்தன்மையுடையவை என்பதும் எனது அபிப்பிராயமாகும். "ஜாதியின்" பேரால் உயர்வு தாழ்வு, "மதத்தின்" பேரால் வேற்றுமை உணர்ச்சி, "தேசத்தின்" பேரால் குரோதத்தன்மை முதலியன இழிகுணங்கள் மனிதனிடமே அதிகமாய்க் காண்கின்றோம். மற்றும் "கடவுளின்" பேரால் மேல் கீழ் நிலை முதலாகிய அயோக்கியத்தன்மைகள் மனித ஜீவனிடமே உண்டு. பகுத்தறிவின் காரணமாக மனித ஜீவன் உயர்ந்தது என்று சொல்லவேண்டுமானால், மேற்கண்ட கெட்ட, தீய—இழிவான, அயோக்கியத்தனமான குணங்கள் என்பவைகள் எல்லாம் மனிதனிடம் இல்லாமல் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் மற்ற "பகுத்தறிவில்லா" ஜீவராசிகளைவிட மனித ஜீவன் மூளை விசேஷம் முதலிய அவயவத்தை நன்மைக்குப் பிரயோகித்துக் கொண்ட ஜீவன் என்று சொல்லப்படும். அஃதில்லாத நிலையில் எவ்விதத்திலும் மனித ஜீவன் மற்ற ஜீவப்பிராணிகளைவிட உயர்ந்ததல்ல என்பதோடு பல விதத்திலும் தாழ்ந்தது என்றுமே சொல்லவேண்டியிருக்கிறது.

## நாஸ்திகம்

'எனக்கு விக்கிரக ஆராதனையில் சிறிதும் நம்பிக்கையில்லை. ஜெபம் வேண்டாம். கோயில்சென்று கும்பிடவேண்டாம். சாம்பிராணி முதலிய செலவு செய்து பூஜைபோடவேண்டாம். தாழ்த்தப்பட்டவர்களையும், தீண்டாதார்கள் என்று கொடுமை செய்யப்பட்டவர்களையும் வெற்றிவேர்வை நிலத்தில் சிந்தச்சரீரத்தால் வயல்களில் உழைக்கின்ற ஏழைகளையும் பார்த்து அவர்களைக்கவனிப்பதில் ஈஸ்வரனைக் காண்கிறேன்.

—ரவீந்திரநாத்தாகூர்.

## பச்சை நாஸ்திகம்

"சாஸ்திரங்களைச்சுட்டுச் சதுர்மறையைப்பொய்யாக்கிச் சூத்திரத்தைக் கண்டு [illegible]"

சாஸ்திரங்களைச்சுட்டு - மனுதர்மசாஸ்திரத்தைச் சுட்டுப்பொசுக்கி, சதுர்மறையைப்பொய்யாக்கி - மேற்கண்ட சாஸ்திரத்திற்கு ஆதாரம் என்று சொல்லப்படும் நான்கு வேதங்களையும் கட்டுப்புரட்டு என்று தள்ளி, சூத்திரத்தைக் கண்டு-பகுத்தறிவின் ஆராய்ச்சியில் இரகசியங்களைக் கண்டு பிடித்து, சகம் [illegible] அலைகளினால் மனித சமூகம் அதமடைவது எப்போது வாய்க்கப்போகின்றது.

—பத்திரகிரியார்

---

உலகத்திலுள்ள நிலப்பரப்பின் மொத்தப் பரப்பு ஒரு கோடியே தொண்ணூற்றேழு லட்சம் (1,97,000,000) சதுர மைல்களாம்.

# "நல்ல நாள்—கெட்ட நாள்"

[தோழர் எஸ். கே. பி. முத்துராஜா]

★

"நல்லநாள் கெட்டநாள்" என்றால் என்ன? அது உண்மையா? அப்படி ஒன்று இருக்கமுடியுமா? நல்லது கெட்டது அறியும் சக்தி காலத்திலா? நடைபெறப்போவதிலா? நாளில் நல்லது கெட்டது என எப்படி அறிவது? ஒரு சமயத்தில்—"ஒரே லக்கினத்தில்" பிறந்தவர்கட்கு ஒரே பலன் எல்லாவகையிலும் நடைபெறுகின்றதா? "சாத்திரத்தில் வல்லவரான வசிட்டர்" குறிப்பிட்ட முடிசூட்டுவிழா நடைபெறாமல் இராமன் காட்டுக்குச் செல்ல நேர்ந்ததேன்?

"வாஸ்து புருஷன்" எழுந்திருக்கும் நாளில் கட்டிய வீட்டில் குடிஇருப்பு நிலைக்காமல், வீட்டைவிற்று வறியராகும் நிலை ஏற்படுதல் ஏன்? "நல்லநாள் கெட்டநாள்" என்று பாராமல் தொழில்கள் செய்து மேனாடுகள் செல்வம் பெருக்கிச் செழிப்பதேன்?

"நல்லநாள்" பாராமல் கல்விகற்கும் பிறநாட்டுக் குழந்தைகள் கல்விகற்று வல்லமையாக அரசாட்சி புரிவதேன்? "நல்ல நாள்" பாராதநாட்டில் செவிடு, ஊமை, குருடர், முடவர் எல்லாம் கல்விகற்றுத் தொழில்வளம்பெற்று வாழ்வதேன்? "நல்லநாள்" பார்த்துச் சகல காரியங்களும் செய்யும் இந்நாட்டு மக்கள் கல்வி தொழிலறிவின்றிக் கதறுதல் ஏன்? "ஆசாரநாளில்" சமைந்தவள் விதவை ஆகிவிடுவது மெய்யானால் "நல்ல நாளில்" சமைந்த பெண்களில் விதவைகள் இருப்பதேன்?

கிணற்றில் விழுந்த குழந்தையை எடுக்கக் காலம் பார்ப்பதுண்டோ? "இராகுவில் கெட்டநாளில்" ரயில் வண்டி ஓடவில்லையா? மார்கழியில் கலியாணம் வேர்போலப் புளிக்குமா?

விவசாயஞ்செய்ய, மாடுவாங்க, உழவு செய்ய, எருவிட, விதைவிதைக்க, பயிர் நட, அறுவடைசெய்ய, அளக்க, களஞ்சியத்தில் சேர்க்க, இருப்புவைக்க, செலவிட, சமைக்க இப்படிப்பட்ட சகல காரியங்களுக்கும் "நல்ல நாள்" பார்க்கும் நம் நாட்டிலே ஒரு ஏகருக்கு சராசரி 988 பவுண்டு பயிர் சாகுபடி ஆகிறது. ஆனால் கனடாவில் ஒரு ஏக்கருக்கு சராசரி 2433 பவுண்டும் ஜப்பானில் ஒரு ஏக்கருக்குச் சராசரி 3070 பவுண்டும் பயிர் சாகுபடியாகிறது. "நல்ல நாள்" பார்த்தும் நம் நாட்டில் விளைவு குறைவதேன்? "நல்லநாள்" பார்க்காத மற்ற நாடுகளில் மிகுந்த விளைவு ஏற்படுவதேன்?

"கல்யாணத்திற்குத் தாலி கல்யாணம், நிஷேகம், பும்ஸவனம், சீமந்தம், பிரசவ வீடு அமைக்க, ஜாதகர்மம், நாமகரணம், குழந்தையை தொட்டிலிலிட, காது குத்த, பெண்களுக்கு மூக்குக்குத்த, உணவூட்ட, குடுமிவைக்க, சவரம்செய்து கொள்ள, பள்ளியில் சேர்க்க, வாசிக்க, உபநயனம், எண்ணெய் தேய்த்துக் கொள்ள, பிரயாணம்செய்ய, சாந்திமுகூர்த்தம்செய்ய, வாகனமேற, வாங்க, ஆடை ஆபரணம் பூண, மருந்துண்ண, மரம் வைக்க, சூளைபோட, கெருப்பு வைக்க, பூமுடிக்க, விருந்துண்ண, வீடு கட்ட, மேய, குடிபுக, அடுப்புமூட்ட, கருமாதிசெய்ய, பிணம் தூக்க இவை போன்ற இன்னும் பல காரியங்களுக்கெல்லாம் "திதி, நட்சத்திரம், யோகம், கரணம், தியாஜ்யம், க்ஷேத்திரம், ஜீவன், இராகு, குளிகை, எமகண்டம், புண்ணிய தினங்கள், மன்வாதி புண்ணிய தினங்கள், யுகாதி புண்ணிய தினங்கள், யுகாந்த புண்ணிய தினங்கள், மேனோக்குநாள், கீழ்நோக்குநாள், சமநோக்கு நாள், எதிர்நோக்குநாள், கரிநாள், கிரகதோஷ பரிகாரம்" முதலியவைகளையும் இன்னும் பலவற்றையும் பார்க்கும் நம்நாட்டில் இந்தியாவில் சராசரி வயது 27. ஆனால் எகிப்து நாட்டில் 33, ஜப்பான் நாட்டில் 43, ருஷ்ய நாட்டில் 45, பிரான்ஸ் நாட்டில் 57, கானடா நாட்டில் 60, யுனைட்டெட் ஸ்டேட்ஸ் (அமெரிக்கா) நாட்டில் 62, யுனைட்டெட் கிங்டம் (இங்கிலாந்து) நாட்டில் 62, நார்வே, ஸ்வீடன் நாட்டில் 63, நியூஜீலந்து நாட்டில் 67. இந்த உலகத்தின் பலநாடுகளிலுள்ள ஜனங்களின் சராசரி வயது உயர்ந்திருப்பதேன்? நம் நாட்டில் சராசரி வயது மிகமிகக் குறைந்திருப்பதேன்?

"நாள் செய்வது நல்லோர் செய்யார்" என்பது ஓர் பழமொழி, நாள் நல்லோர் ஆகிய இரண்டில் நாளை மாத்திரம் உயர்வாகக் கூறுவானேன்? நாள் என்ன செய்யும்? நன்மையான காரியங்களை நல்லோர் செய்வதால் உலகத்தாருக்குச் சுகமுண்டாகிறது. நாள் என்ன சுகத்தைத் தருகிறது? அது நல்லோரால் கிடைக்கக்கூடிய சுகத்தைவிடச் சிறந்ததான ஓர் சுகத்தைத் தந்தாலன்றோ "நாள் செய்வது நல்லோர்" என்னும் பழமொழி உண்மையாகும்.

"நாளுக்குநாள் நகர்ந்தது கர்ணம் மாணை" என்பது போல நாளானது தீமையான காரியங்களாலுண்டாகும், துக்கத்தைச் சிறுகச் சிறுக நகர்த்தி மறக்கடிக்கும். உதாரணமாக ஒரு மனிதன் தெருவில் நின்று ஒருவரை வாயில் வந்தபடி திட்டுகிறான். அதுபோது அவருக்கு உண்டாகும் கோபத்துக்கு அளவே இல்லை. மனதிற்கு மகா சங்கடமாயிருக்கிறது. அவனை என்ன செய்யலாம்? என்று யோசிக்கிறார், ஒருநாள்—இரண்டுநாள்—மூன்றுநாள் ஆகிறது. அவருடைய கோபம் தணிந்து எண்ணம் குறைகிறது. நாள் செல்லச் செல்லக் குற்றம் செய்தவன்மேல் அவர் கொண்டிருந்த கோபம் படிப்படியாகத் தணிந்து அவருக்குச் சாந்தமெனும் நற்குணமுண்டாகிறது. நல்லோர் இந்நற்குணத்தை யனுசரிக்கும்படி அவருக்குப் போதிப்பதைவிட நாள் போதிப்பது பலமாய்


நமது தலைவர்கள் படம் போட்டு

உங்கள் விலாசத்துடன்

★ கார்டு
★ கவர்
★ லெட்டர் பேப்பர்

★ பொங்கல் வாழ்த்து
★ காலண்டர்
★ அழைப்புகள்
முதலானவ்வைகள்

அச்சடித்துக் கொடுக்கப்படும்.

உங்கள் மாதிரிக்காப்பியுடன் ஆர்டரை அனுப்பி வையுங்கள்.

மானேஜர், தமிழன் அச்சுக்கூடம், ஈரோடு.

# படித்த மனிதனின் அடையாளங்கள் யாவை?

★

"படித்த மனிதர் என்று நாம் சொல்கிறோம். ஆனால் அப்படிப்பட்ட விஷயமெதுவும் இருப்பதாக நான் நினைக்கவில்லை. ஏனெனில் நாம் வாழ்நாள் நெடுகிலும் படித்துக்கொண்டே அதாவது உலக விஷயங்களைக் கற்றுக்கொண்டே வருகிறோம். தமது படிப்பு முடிந்துவிட்டதாக யாரும் எண்ணக்கூடாது. கல்வி என்பது முடிவற்ற ஒரு நெடும் பாதை.

"கல்வி" என்ற சொல்லின் பொருளை இங்கு விளக்க நினைக்கின்றேன். தாமஸ் ஹக்ஸ்லி என்ற அறிஞர் அதை நன்கு விளக்கியிருக்கிறார். அவரது விளக்கம் வருமாறு:-

'வாழ்க்கை என்ற பெரிய விளையாட்டின் விதிகளை அறிந்துகொள்வதும், இயற்கையின் நியதிகளை உணர்வில் பதிப்பதும் தான் கல்வி எனப்படும். கல்வி என்ற சொல் உலக விஷயங்கள், அவற்றின் சக்திகள் ஆகியவற்றை மட்டும் உள்ளடக்கியதல்ல. அது மனிதர்களையும் அவர்களுடைய போக்குகளையும் தன்னகத்தே அடக்கி நிற்கிறது. மேற்கூறிய நியதிகளுக்கு இசைந்து நடக்க வேண்டுமென்ற ஒரு உண்மைப் பற்று உள்ளத்தே உருவாக்கப் படுவதையும் இச்சொல் குறிக்கிறது"

"இவ்வாறு அறிஞர் ஹக்ஸ்லி கல்வியின் பொருளை விளக்குகிறார். உலக முழுதும் நமது பள்ளிக்கூடம்தான். கல்வி முயற்சியை 'இறந்த காலத்தில்' வைத்து நாம் பேசக்கூடாது. அதாவது ஒரு முடிந்துபோன விஷயமாக அதை நாம் எண்ணக்கூடாது. ஏனெனில் உலகில் வாழும் ஒவ்வொருவர்க்கும், இவ்வுலகமானது அவர்கள் பிறந்தபோது சொல்லொணாத புதுமைகள் நிரம்பி நின்றது போலவே எக்காலத்தும் புதுமையுடன் விளங்குகிறது. காணவல்ல எவருக்கும் அப்புதுமைகள் விளங்காமற் போக மாட்டா.

"இயற்கை (நம்மைச் சூழ்ந்துள்ள உலகம்) யானது உலகம் என்ற அந்தப் பெரிய பல்கலைக் கழகத்தில் நமக்கு இன்னும் பொறுமையுடன் கல்வியறிவு ஊட்டிவருகிறது. இயற்கையின் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெறுவோர்—மனித வாழ்வின் அடிப்படை விதி முறைகளை அறிந்து கடைபிடிப்போர்தாம்—உண்மையில் பெரியோராவர். இவ்வுலகில் வெற்றிகண்ட மனிதர்கள் என்று அவர்களைத்தான் சொல்ல வேண்டும். படித்தவர்கள் என்ற சொல்லுக்கும் அவர்களே உரியவராவர்.

"இயற்கையினுடைய போதனை முறையில் உள்ள குறைபாடுகளைத் திருத்துவதுதான் கல்வியின் நோக்கம். விரிந்த மனப்பான்மையை அளிக்கும் கல்வியானது ஒரு மனிதன் இயற்கையின் நியதிகளை அறிந்து அவற்றைக் கடைப்பிடித்தொழுகுவதற்கு உதவி புரிகிறது. இயற்கை தனது தண்டனைகளை எவ்வாறு வெகு தாராளமாக அள்ளித் தூவுகிறதோ அவ்வாறே தனது வெகுமதிகளையும் அள்ளித் தூவுகிறது. அந்த வெகுமதிகளின் சிறப்பை உணர்ந்து அவற்றைப் பெற்றுக் கொள்ளுவதற்கு அவசியான ஒரு பயிற்சியையும் பிரஸ்தாப கல்வி நமக்கு அளிக்கிறது.

"படித்த மனிதனின் பண்பு—அடையாளம்—என்ன? எவன் தனது இளமைக் காலத்தில் தன் விருப்பத்திற்கிணங்க வேலை செய்யும் ஒரு பணியாளாக தனது உடலைப் பழக்கி அவசியமான, தன்னால் செய்யமுடிந்த எல்லா வேலைகளையும் இலகுவாகவும், மகிழ்ச்சியோடும் செய்கிறானோ அவன்தான் படித்த மனிதன். படித்த மனிதன் என்பவனுடைய அறிவு தூய, கலங்காத, ஒழுங்கான ஒரு யந்திரமாக விருக்கும். அந்த யந்திரத்தின் எல்லா உறுப்புகளும் சமமான வலிமைபெற்றிருக்கும். அவ்வுறுப்புகள் ஒழுங்காக வேலை செய்யக்கூடிய முறையில் அமைந்திருக்கும். படித்த மனிதன் என்பவன் எவ்வித வேலையையும் செய்வதற்கு சித்தமாயிருப்பான். அவனுடைய மனத்தே இயற்கையின் பெரிய, அடிப்படை உண்மைகள், அதனுடைய நியதிகள், அதனுடைய செயல்கள் ஆகியவை பற்றிய அறிவு பொக்கிஷமாகக் குவிந்து கிடக்கும். அவனிடத்தில் எப்போதும் உற்சாகமும், சுறுசுறுப்பும் பொங்கி வழியும். ஆனால் அவனது உணர்ச்சிகள் அவனது மனத்தின் கட்டளைகளுக்கு கீழ்படிந்து நடப்பவையாகவும் மனச்சாக்ஷியின் பணியாட்களாகவுமே யிருக்கும்.

"படித்த மனிதனை எப்படிக் கண்டுகொள்வது? எவன் எல்லா அழகினிடத்தும், அது இயற்கை அழகாயிருப்பினும் சரி, கலை அழகாயிருப்பினும் சரி, பற்று வைக்கப் பழகியிருக்கிறானோ, எவன் எல்லாத் தீமைகளையும் வெறுத்து ஒதுக்கி, தன்னைப்போல பிறரை கௌரவிக்கப் பழகியிருக்கிறானோ அவனே கற்றுணர்ந்த நன்மகனாவான். இந்த அர்த்தத்தில் கவனித்தோமானால் கல்வி என்பது புத்தகங்களிலோ அல்லது பள்ளிக்கூடங்களிலோ அடங்கிவிடுவதல்ல என்ற பேருண்மை நன்கு புலப்படும். கல்வி வானினும் விரிந்தது; கடலினும் ஆழ்ந்தது. அது குறுகிய பரப்புடையதல்ல."

['இது இங்கர்ஸன் என்ற பாதிரியார் பேசியதின் சுருக்கம்]

"தமிழ் முரசு" சிங்கப்பூர்.

---

...கிறது. ஆகவின், "நாள் செய்வது நல்லோர் செய்யார்" என்று அறிஞர்கள் கூறினார்கள். ஆனால் இப்பழமொழிக்கு இன்னொரு அர்த்தமுண்டென்று கூறுவாருமுளர். அதாவது "சோதிட சாஸ்திரீயமாக ஒரு நல்ல நாளில்" காரியத்தை ஆரம்பித்தால் அது, சிறிதேனும் இடையூறின்றி நிறைவேறுமென்பதே. இது அறிஞர்கள் ஒப்புக்கொள்ளத்தக்கதா?

பேஷ்ப் புரட்டுக்கள் மாள, அநீதித் திட்டங்கள் அழிய, அக்கிரம விஷயங்கள் அகல, அபாரப் புருஷர்கள் மறைய ஆவன செய்வோமாக! நல்லநாள்—கெட்ட நாள் பேதம் நலிந்திடுவதாக!

# வெந்த புண்ணில் வேலால் குத்தவேண்டாம்.

[ஊழியன்]

★

ஆரியர்கள் இந்நாட்டில் குடியேறி 3000 ஆண்டுகளுக்கு மேலாக ஆகின்றன. ஆரியர்கள் என்றைக்கு இந்நாட்டில் புகுந்தனரோ அன்றே வந்தது அனர்த்தம். சாதி மத பேதமற்ற மக்கள் இந்தச் சழக்கர்களின் வரவால், இவர்களின் குயுக்தி வேலையால், நயவஞ்சகச் சூழ்ச்சியால், ஆயிரக்கணக்கான சாதிகளாகப் பிரிக்கப்பட்டனர்—பிரியலாயினர். நாளுக்கு நாள் வளர்ந்தன, ஆரியர் உண்டாக்கிய அறிவுக்கொவ்வாச் சாதிகள். சாதிக்குச் சாதி வித்தியாசம். வித்தியாசம் மட்டுமல்ல, வெறுப்பும் தலைவிரித்தாட ஆரம்பித்தது. ஒருவரை ஒருவர் வேறாக, அயலானாக, எதிரியாக எண்ணும்படி, நோக்கும்படி, நடத்தும்படி செய்தது இந்த சாதித் திமிர். இதற்கு அன்று இரையானவர்கள் தான் குறிப்பிடத்தக்க இந்நாட்டுப் பழங்குடி மக்கள்.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக ஆதிதிராவிட மக்கள் பொதுச் சமூகத்திலிருந்து பிரிக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, அடிமையாக்கப்பட்டு விட்டனர். அன்று வீழ்த்தப்பட்ட சமூகம் இன்னும் விடுதலை பெற இயலவில்லை எவ்வித உரிமையோ, உயர்வோ எய்த முடியவில்லை. உணர்ச்சியற்று, உரமிழந்து, மனவலிமை குன்றி உழைத்துழைத்து அலுத்துப் போய் விட்டார்கள். "நாம் ஏன் இவ்வளவு இழிவாக நடத்தப்படுகிறோம்? தீண்டப்படாமல் ஆரத்தப்படுகிறோம்? நாயினுங் கீழாய் நலிந்து விட்டோம்? ஓய்வின்றி இராப்பகலாக மழை என்றோ, வெய்யிலென்றோ, பனி என்றோ பாராமல் உழைக்கிறோம்; நாம் வெட்டாத குளமில்லை! கட்டாத கிணறில்லை! போடாத சாலை இல்லை! செப்பனிடாத பாதை இல்லை! உழாத, நடாத வயலில்லை! நாட்டில் உற்பத்தியாகும் அவ்வளவு உணவுப் பொருள்களையும் நாம் தான் உற்பத்தி செய்கிறோம்! ஆனால் நமக்கு ஏன் உணவில்லை? ஏன் உடை இல்லை? ஏன் வீடு இல்லை? ஏன் படுக்கப்பாயில்லை? ஏன் குளமில்லை? ஏன் கிணறில்லை? ஏன் பாதையில்லை? குடிப்பது கூழாகத்தானே இருக்கிறது; கட்டுவது கந்தையாகத்தானே உள்ளது; குடியிருப்பு குடிசையாகத்தானே இருக்கிறது," என்று உணர்வதற்குக்கூடச் சக்தி இல்லாமல் செய்து விட்டது, ஆரியர் புகுத்திய சாதிப் பாகுபாட்டால் ஏற்பட்ட அடிமை மனப்பான்மை. இல்லை என்றால் மூவாயிரம் ஆண்டுகளாக ஆரியத்திற்கும், சாதி இந்துக்களுக்கும், இந்து மதத்திற்கும் பிறவி அடிமைகளாக இருப்பார்களா இந்நாட்டுப் பழங்குடி மக்கள்? உலகத்தில் எங்கு பார்த்தாலும் உரிமைப் போராட்டம் நடக்கும் இந்த 1947ல் கூட, இந்தச் சமூகம் உணர்ச்சியோ, எழுச்சியோ, கிளர்ச்சி மனப்பான்மையோ இல்லாமல் இருக்குமா? பழங்குடி மக்களுக்குப் பாதுகாவலர்கள் என்பவர்கள் கூடக் கவலையற்ற தனமாகக் காலத்தைக் கடத்துவார்களா!

ஆகையால் பழங்குடி மக்கள் சமுதாயம் பரிதாபத்துக் குரிய நிலையில் உள்ளது; எடுப்பார் கைப் பிள்ளையாக இருக்கிறது; தன்னை யார் என்ன சொன்னாலும் எப்படி நடத்தினாலும் ஏனென்று கேட்க வலியற்று, மான உணர்ச்சியற்று இருக்கிறது.

இந்த நிலை சாதி இந்துக்களுக்குச் சாதகம்; ஆரியர்களுக்கு ஆக்கம். ஆகையால் ஆரியர்களும், அவர்களது அடிவருடிகளும் ஆதித்திராவிட மக்களை அநேகம் நூற்றாண்டுகளாக சொல்லொணாத் துயரத்திற்கு உள்ளாக்கி இருக்கின்றனர். அடிமை வாழ்க்கையே நடத்தி வருவதால் விடுதலை வேட்கை இன்றி இழி நிலையிலுள்ளனர் பழங்குடி மக்கள். இவ்வளவு இழி நிலையிலுள்ள மக்கட்கு அதிகமான இழிவு தரும் "ஹரிஜன்" என்னும் பட்டப் பெயரை அளித்தார். யார்? "மகாத்மா" காந்தி. 1932ல் பழங்குடி மக்களுக்கு இந்த இழி பெயர் இடப்பட்டது. 15 ஆண்டுகளாகின்றன ஆதித்திராவிட மக்களுக்கு அடிமை முத்திரையை அந்தராத்மாவுக்குச் சொந்தக்காரராகிய காந்தியார் மாற்றி நிலையாக இருக்க வைத்தது.

பழந்தமிழ் மக்கள்; பூர்வீகக் குடிமக்கள்; ஆதித்திராவிடர்கள் என்னும் அழகிய பெயர்கள் உண்டு. ஆதித்திராவிட சமூகத்திலுள்ள பல பிரிவினரையும் ஒன்று சேர்த்து, அரசியல் சலுகை வழங்க ஏதுவான முறையிலே "ஷெடியூல்டு" வகுப்பினர் என்று மரியாதையாக உண்மைப் பொருள் நிறைந்ததாக அழைத்தனர் ஆங்கிலேயர். முன்பு குறிப்பிட்டு வந்த பெயர்கள் மனது பூரிப்புக்கும், மரியாதை உணர்வுக்கும் முன்னேற்றச் செய்கைக்கும் உகந்தவை. ஆனால் நாட்டுக்குச் சொந்தப்படுத்தி அழைக்க நா எழவில்லை அஹிம்சா மூர்த்திக்கு! மரியாதைப் பெயர் கொண்டழைக்க மனமில்லை மகாத்மாவுக்கு! ஏன்? அவர் சாதி இந்து; சனாதனி, வர்ணாச்ரம தர்மி. ஆகையால் "ஹரிஜன்" என்னும் பெயரைச் சூட்டினார், உள்ள பெயரை வைத்துக் கொண்டே தாழ்த்தப்பட்ட மக்கள் உயர உழைத்தால் தன் சேவையை உலகம் மதியாது என்று! இது வெந்த புண்ணில்வேலால் குத்தும் செய்கையல்லவா?

---

மேல்நாட்டு வித்துவான்களும் பண்டிதர்களும் புதிய கருத்துக்களையும், புதிய காட்சிகளையும் கண்டுபிடிப்பதில் தங்கள் அறிவைச் செலுத்தி வருகிறார்கள். இந்தியப் பண்டிதர்களோ முன் ஒருவன் எழுதிவைத்ததை உருட்டு உருப்போட்டு புதிய தத்துவார்த்தம் கூறுவதிலும், கொங்கை, அல்குல், தொடை, உதடு கூந்தல் ஆகியவைகளை வர்ணிப்பதிலும், கடவுளைப் பற்றி போராடுவதிலும், கண்ணில் நீர்பெருகப் பாடுவதிலும் கருத்தைச் செலுத்தி வருகிறார்கள்.

ஈ. வெ. ராமசாமி.

# மதிப்புரை

[மதிப்புரை வேண்டுவோர் இரு பிரதிகள் அனுப்பவேண்டும்]

## புரட்சி முரசு.

(கவிதை நூல்)

ஆக்கியவர்: என். இ. பாலகுரு.
அர்ச்சுனன் நிலையம், ஈரோடு.
(கிரவுன் 1-8. 48 பக்கங்கள்
விலை அணா 12)

தோழர் பாலகுரு அவர்கள் மறைந்த தளபதி அர்ச்சுனன் அவர்கள் மீது வைத்திருக்கும் அன்பின் பெருக்கால் இந்நூலை அர்ச்சுனன் நினைவு மலராக வெளியாக்கி யிருக்கின்றார்.

தொழிலாளர் மக்களின் துன்ப நிலையையும் மாணவர்களின் மாண்புறு நெறியையும், தமிழனின் தன்மதிப்பில்லாத தகுதியற்ற நிலையையும், பொய்ம்மையைப் பெருக்கும் புலவரின் நிலையையும் ஆரியர் தம் அட்டூழியங்களையும், குமுறும் உள்ளத்தோடு கொதிப்படைந்த சொற்களால் ஆசிரியர் வெளிப்படுத்துகின்றார். வீரவுணர்ச்சி மட்டுமோ காதலுணர்ச்சியைக் குறித்தும் கவிதை செய்வேன் என்பது போலக் காதற்பகுதி யிலும் ஆசிரியர் கை வைத்திருக்கின்றார். தாளத்தோடு பண்ணிசைத்துப் பாடவல்ல சில பாக்களும் இடையிடையே இதில் காணப்படுகின்றன.

ஆசிரியரின் இப்போக்கு இன்னும் வளர்ச்சியடைந்து, நல்ல முறையில் பல கவிதைகளை நமக்குத் தருவார் என்று நாம் நம்பி ஆசிரியரின் இந்த முயற்சியைப் பெரிதும் வரவேற்கின்றோம்.

## காமாந்தகாரக் கடவுள்கள்

ஆசிரியர்: பி. என். இராமானுஜம்
ஆராய்ச்சிப் பதிப்பகம் பொள்ளாச்சி.
(கிரவுன் 1-8. 42 பக்கங்கள்
விலை அணா எட்டு)

படைக்கும் கடவுள் காக்கும் கடவுள் அழிக்கும் கடவுள் என மூவர்; இவர்கள் மும்மூர்த்திகள்; முதற் கடவுளர்கள் என்று இன்னும் நம்புகின்றனர் நம் திராவிடர்களிற் பலர். முத்தொழில் புரியும் மும்மூர்த்திகள் என்று எங்கெங்கும் புராணங்கள் கூறுகின்றனவே அந்தப் புராணங்களில் காணப்படும் அக்கடவுளர்களின் காமாந்தகார லீலாவினோதங்களையே தோழர் இராமானுஜம் இந்நூலில் கூறுகின்றார்.

பொள்ளாச்சி ஆராய்ச்சிப் பதிப்பகத்தாரின் இம்முயற்சியைப் பாராட்டுகின்றோம். இன்னும் குறைந்த விலையில் இதுபோன்ற நூல்களை வழங்கினால் பெரிதும் பயனுண்டு என்பது நமது கருத்து.

## திராவிடப் புயல்

(இரண்டாம் பிரதி)

ஆசிரியர்: எ. டி. மாரியப்பன்.
தம்பிக்கோட்டை போஸ்டு தஞ்சை.
(டிம்மி 1-8. 44 பக்கங்கள்
விலை அணா எட்டு)

திராவிடத்தில் நிறைந்து கிடக்கும் ஆரியக் குப்பை கூளங்களை யெல்லாம் பறக்கடித்து வெளியேற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு திராவிடப்புயல் தோன்றியுள்ளது.

இதனுள் பல கட்டுரைகளும் கவிதைகளும் பல இளம் எழுத்தாளர்களால் தரப்பட்டிருக்கின்றன. எழுத்துப்பிழைகள் மலிந்துள்ளன. இக்குறைபாடு அடுத்த பிரதியில் அவசியம் நீக்கப்படவேண்டியதாகும். ஆசிரியரின் முயற்சியை வரவேற்கின்றோம்.

## நரகாசுரப் படுகொலை.

ஆக்கியோன்: எம். எஸ். இராமசாமி.
[டிம்மி 1-8. 60 பக்கங்கள் விலை
அணா 12]

இந்த ஆராய்ச்சி நூல் தீபாவளிக்குக் கூறப்படும் கதையில் வரும் ஒவ்வொரு விஷயத்தையும் நன்றாக ஆராய்ந்து "உடன்பட்டு மறுத்தல்" எனும் தர்க்க நீதிக்கிணங்க எடுத்து விளக்கி உடன்பட்டு எவரும் ஒப்புக்கொள்ளத்தக்க வகையில் மறுத்துக்கூறுகின்றது. வெளிநாடுகள் அனைத்தும் விஞ்ஞான ஆராய்ச்சிகளில் மூழ்கியிருக்கும் இந்த நூற்றாண்டில், அதுவும் நாம் சுதந்தரத்தை அடைந்து விட்டோம் என்று சொல்லப்படும் இவ்வேளையில் தோழர் இராமசாமியைப் போன்றவர்கள் இதைப் போன்ற புராண ஆராய்ச்சிகளில் ஈடுபட வேண்டிய நிலையிலேயே நம்நாடு இருந்து வருகின்றது என்பதைச் சுய சிந்தனையுடையோர் மறுக்க முடியாது. சுயமரியாதை இயக்கம் கூறி வந்த கருத்துக்களையே தோழர் இராமசாமியவர்கள் தொகுத்து விளக்கி வகைப்படுத்திப் பல ஆதாரங்களைக் கொண்டு நூல் வடிவில் தந்திருக்கின்றார். ஆதலால் இதனை ஒவ்வொரு திராவிடனும் வாங்கி வாசிக்க வேண்டும் எனவும் ஆசிரியர் மேலும் பல நூல்களை இத்துறையில் வெளியிட்டு இன்னும் எளிய விலையில் வழங்கவேண்டும் எனவும் விரும்புகின்றோம்.

கிடைக்குமிடம்.
சி. சண்முககந்தரன்,
அருப்புக்கோட்டை.

## அல்–இஸ்லாம்

(வார இதழ்)
ஆசிரியர்: எம். எஸ். எம். பரூக்.
கொழும்பு.

டிம்மி 1-2. 6 பக்கங்களைக் கொண்டு இஸ்லாமியத்தைப் பெருமைகளை வலியுறுத்தி நபிகள் நாயகம் அவர்கள் வழி நின்று தொண்டாற்றி வரும் போக்கினையுடையது.

## வழி காட்டி.

(மாத இருமுறை)
ஆசிரியர்: இ. மாணிக்கம்
தெப்பக்குளம் திருச்சி.
[டிம்மி 1-4 8 பக்கங்கள். தனி இதழ் 0-1-6. ஒரு ஆண்டுக்கு ரூ 3]

தமிழ் நாட்டில் பெரிதும் ஒதுக்கித் தாழ்த்தி வைக்கப்பட்டுள்ள வகுப்புகளுள் ஒன்றான மருத்துவ வகுப்பிற்கு வழிகாட்டி தோன்றியுள்ளது. பகுத்தறிவை அடிப்படையாய் வைத்து சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பும் வகையில் வழிகாட்டி பாடுபட்டு வருமெனத் தெரிகின்றது. மருத்துவ சமுதாயத்திற்கு உண்மையான வழி காட்டியாய் இருந்து மருத்துவத் தோழர்களை மக்களாக்க— திராவிடர்களாக்கத் தளராது பாடுபடுமென்று நம்புகின்றோம்.

## மருத்துவமணி.

(மாத வெளியீடு)
ஆசிரியர்: எஸ். வி. [illegible], நாமக்கல்.
[டிம்மி 1-8. 40 பக்கங்கள் தனி இதழ் நாலணா. ஆண்டுக்கட்டணம் ரூ. 3-8-0.

"வாழ் வாழ விடு" என்ற இலட்சியத்தோடு தோன்றி மருத்துவர்களுக்குப் பாடுபட முன்வந்திருக்கும் ஒரு திங்கள் இதழ். பெரியார் அவர்கள் பற்பல காலங்களில் பேசிய பேச்சுகளின் பகுதியும் அண்ணாவின் "சமதர்மம்" என்ற பேச்சின் பகுதியும் இதில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. சமுதாய விழிப்புக்கான கட்டுரை கவிதைகளும் காணப்படுகின்றன. திராவிடர்கள்—சிறப்பாக மருத்துவர்கள் இதனைப் பெரிதும் ஆதரிப்பார்கள் என நம்புகின்றோம்.

## கிடைக்கப்பெற்றோம்.

சுதந்திர இந்துஸ்தான்
வார இதழ் விலை அணா 0-1-3
ஆசிரியர்கள்: வை. பஞ்சநாதம்
பி. ஏ. பி. எல்.
பண்டித ஜி. கண்ணையா.
பிரகாச வாசகம் சென்னை.

Edited, Printed and Published by N. Karivaradasvamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE.